விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 19 வெள்ளிக்கிழமை (03.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 197

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம் 1000/= + 300/= மட்டுமே



## சுகாதார விதிமுறை மீறல்; திருமண மண்டபத்துக்கு பூட்டு

### வடமராட்சிப் பகுதியில் சம்பவம்

(கரணவாய்)
கொரோனா வைரஸின் கட்டுப்பாட்டு விதிகளை மீறிச் செயற்பட்ட திருமண மண்டபம் ஒன்று 14 நாட்களுக்கு தற்காலிகமாக சுகா 23

## கட்சியின் சின்னங்களை முகக் கவசங்களில் அச்சிடத் தடை

### பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவிப்பு

(கொழும்பு)
பிரசார நடவடிக்கைகளுக்காக முகக் கவசங்களில் வேட்பாளர் களின் இலக்கங்கள், பெயர்கள் மற்றும் படங்கள் போன்றவற்றை வெளியிட முடியாது என பொலிஸ ஊடகப்பிரிவு அறிவித் துள்ளது. 23

### அதிகாரப் பகிர்வுடன் கூடிய

# மாகாண சபை முறை பாதுகாக்கப்படும்

க.பொ.த (சா/த)
மாணவர்களுக்கான
தமிழ் மொழியும் இலக்கியமும்
பகுதி I, II, III
மாதிரி வினாத்தாள்கள்
உள்ளே




## யாழில் சஜித் பிரேமதாஸ உறுதி

(யாழ்ப்பாணம்)
ஒருமித்த நாட்டுக்குள் அதிகாரப் பகிர்வுடன் கூடிய மாகாண சபை முறை தன்னால் பாதுகாக்கப்படும் என முன்னாள் அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவிய லாளர்கள் சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார். இதன்போது அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், "நுண்கடனி 23

## நயினைத் தாய்க்கு இன்று தேர்



(யாழ்ப்பாணம்)
நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் இன்று தேர்த் திருவிழா இடம்பெறுகிறது. 23

## நித்திரைக்குச் சென்றவர் சடலமாக மீட்பு

### வேப்பங்குளத்தில் பரிதாபம்

(வவுனியா)
வவுனியா - வேப்பங்குளம் பகுதி வீடு ஒன்றில் இருந்து நேற்றுக் காலை இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள் ளது. 23

### வடக்கு மக்களின் ஆதரவில்லாமல்

## ஜனாதிபதியைத் தெரிவு செய்யலாமென தெற்கு மக்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்

### பிரதமர் மகிந்த பெருமிதம்

(கொழும்பு)
வடக்கு மக்களின் ஆதரவு இல்லாமல் ஜனாதிபதியைத் தெரிவு செய்ய முடியும் என்பதை தெற்கு மக்கள் உறுதிப்படுத்தி யுள்ளார்கள். எனது 23

## வீட்டின் மீது பெற்றோல் குண்டு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் இந்துக் கல் லூரிக்கு அண்மையில் உள்ள வீடு ஒன்றின் மீது இனந் தெரி யாத மர்மக் கும்பல் ஒன்று பெற்றோல் 23

### இந்தியாவிலிருந்து கடல் வழியாக

## நெடுந்தீவுப் பகுதிக்குள் நுழைந்தவர் கைது

(யாழ்ப்பாணம்)
தமிழகத்திலிருந்து வேல ணைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் நெடுந் 23

## புலிகளின் ஆவணங்கள் மாத்தளனில் மீட்பு!

(பனிக்கன்குளம்)
முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை தேடித் தோண்டும் நடவடிக்கை ஒன்று முன் னெடுக்கப்பட்டுள்ளது.



23

## கொரோனா 2066

(கொழும்பு)
நாட்டில் நேற்று 12 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளதாக சுகாதார 23

### வடக்கு – கிழக்கு மாகாணங்களில்

## 99 சதவீத தொல்பொருள்கள் விகாரைகளுக்குரியவையே

### எல்லாவல மேதானந்த தேரர் கண்டுபிடிப்பு

(கொழும்பு)
வடக்கு-கிழக்கு மாகாணங் களில் தமிழர்களின் தாயகம் என்பதற்கான எவ்வித சான்று களும் இல்லை என் பதை உறுதியாகவே 23


## மிருசுவிலில் ஒருவர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் - மிருசுவில் பகுதியில் 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நான்காவது ஆண்டு நினைவு நாள்

அமரர்
## முத்துச்சாமி பாலசுப்பிரமணியம்
( மீசை )



தோற்றம் - 25.03.1954
மறைவு - 19.06.2016

[ திதி : 03.07.2020 ]

அப்பாவின் ஆழமான அன்பும்
வலிமையான வார்த்தையும் - தான்
நாம் சோர்கின்ற போது துணிச்சலைத் தந்திடும்.
இன்றோ வேதனைகளை நெஞ்சில் சுமந்து
விழிநீர் சொரியும்படி எம்மை
தவிக்கவிட்டுச் சென்றதேனோ!
ஆண்டுகள் நான்கானாலும் அப்பாவின்
நினைவுகள் எம்முடனே வாழும்.
அப்பாவின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-9322)

நிரு களஞ்சியம்
டச்சு றோட், சித்தன்கேணி.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## பாக்கியம் செல்லத்துரை

புலோலி வடகிழக்கு உத்திராவத்தையைப் பிறப்பிடமாகவும் சந்தா தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியம் செல்லத்துரை நேற்று (02.07.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மூத்தமகளும் வேலுப்பிள்ளை-பார்வதி தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற முறிவு நெரிவு வைத்தியர் செல்லத்துரையின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் ஸ்ரீஸ்கந்தராசா (கொழும்பு), ஜெயவீரசிங்கம் (முறிவு நெரிவு வைத்தியர்), குணசிங்கம் (பிரான்ஸ்), புவனேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி மற்றும் தனபாலசிங்கம் (ஜேர்மனி), காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் மற்றும் புவனேந்திரபாமா (ஜேர்மனி), பத்மரஜனி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, தவபாய்க்கியம் மற்றும் அன்னமேரி, யோகமணி, கீதா (ஜேர்மனி), காலஞ்சென்ற நடராஜா, பரராஜசேகரம் (ஜேர்மனி), போஷன்டரன்ஸ் (சாரதி- இ.போ.ச பருத்தித்துறை சாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2020) வெள்ளிக்கிழமை பி.பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனை விழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 770 7179
077 188 2000
(C-9824)
தகவல்:-
குடும்பத்தினர்

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் எம்.பிக்கள் இருவரின் உருவப் பொம்மைகள் எரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரின் உருவப் பொம்மைகளை செருப்பால் அடித்து, தீயிட்டு சிலரால் வெளியிட்ட காணொளி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வடமராட்சி, முள்ளி பகுதியைச் சேர்ந்த சிலர் நேற்று இந்தப் பரபரப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, தமிழ் அரசுக் கட்சியின் முன்னாள் எம்.பிக்கள் இருவரின் உருவப் பொம்மைகளே எரிக்கப்பட்டன.

இதன்போது, இருவரின் பெயர் குறிப்பிட்டு, குற்ற சாசனம் வாசித்தனர்.

(ஞா)

# அநாவசிய மின்கட்டண அதிகரிப்பை நிவர்த்தி செய்ய அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

மின்சாரக் கட்டண அதிகரிப்பு குறித்து மக்களுக்கு நிவாரண வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானிக்கவுள்ளதாகவும் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரசாங்கம் கூறுகின்றது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று அரச தகவல் திணைக்களத்தில் இடம் பெற்றது. இதில் கலந்துகொண்ட அமைச்சரவை இணைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன இதனைக் கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,மின் கட்டணம் குறித்த பிரச்சினையொன்று நிலவுகின்றது. கோவிட் காலத்தில் செலுத்த முடியாத மின் கட்டணங்களை செலுத்தக் கோரி இப்போது வீடுகளுக்கு மின் கட்டணப்பட்டியல் வழங்கப்படுகின்றது. இந்தக் கட்டணத்தை ஒரே நேரத்தில் செலுத்த வேண்டியுள்ளதால் அதிக தொகையாக அது வெளிப்படுகின்றது. இது குறித்த முறைப்பாடுகள் பல மின்சார சபைக்கு கிடைக்கப் பெற்றுள்ளன. அமைச்சரவையில் இது குறித்த காரணிகள் ஆராயப்பட்டது. அமைச்சர் மகிந்த அமரவீரவும் அது உண்மை என்பதை அமைச்சரவையில் ஏற்றுக் கொண்டார் என்றார்.

(ஞா)

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
மீண்டும் ஆரம்பம்
சனி (4/7)
ஞாயிறு (5/7)
9.30a.m-2.30p.m
• பதிவாளர்
• இறைவரிச்சேவை
• சட்டமாணி நுழைவு
• SLTES • SLEAS • SLAS
• பல்கலைக்கழகம் விசேட கற்கைத் தெரிவு பொது உளச்சார்பு
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
யாழ். ஆஸ்பத்திரி வீதி,
[கொமர்ஷல் வங்கி அருகில்]
(C-9823)

வீடு வாடகைக்கு
வெளியூர்களில் இருந்து வருபவர்கள் திருமணம் மற்றும் சுப காரியங்களுக்கு தங்கி நின்று செய்வதற்கு ஏற்ற வீடு சகல தளபாட வசதிகளுடன் கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்குண்டு.
(3181)
Tel : 077 285 0753

AMC ACADEMY
Clock Tower Road
( வெலிங்டன் சந்தி )
பிரத்தியேக கணக்கீட்டு வகுப்புக்கள்
A/L 2020 தமிழ், ஆங்கில மொழி
A/L 2021 புதிய பிரிவு } தமிழ், ஆங்கில மொழி
A/L 2022 புதிய பிரிவு
ஆரம்பம் : சனி காலை 9.00 மணி
(3180)
By - CELVAN Tel : 077 694 4543

சுதேச உதவி
வைத்தியர் தேவை
(C-9818)
தொடர்புகளுக்கு: 077 339 9072

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 05 | | 14 |
| 02 | | 07 |
| 1964 | | 2019 |



அமரர்
## செல்வராசா தயானந்தன்

திதி பூர்வபட்ஷ திரயோதசி

" உறங்குவது போலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு "

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3163)

கோண்டாவில்

தகவல் -குடும்பத்தினர்.

# கொரோனாவுக்குக் கிடைத்த நிதி எங்கே?

## அரசாங்கத்திடம் ரணில் கேள்வி



(கொழும்பு)

**அரசாங்கத்திடம் தற்போது கேட்க வேண்டியது கொரோனா பற்றி அல்ல எனவும் கிடைத்த நிதியுதவிகளுக்கு என்ன நடந்தது என்றே என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நடைபெற்ற அந்தக் கட்சியின் தொடர்பாடல் செயலணியின் சந்திப்பில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து எனக்கு தெரிந்த வரையில் கொரோனா நிதியுதவியாக 200 மில்லியன் டொலர்கள் கிடைத்துள்ளன. எனது கணக்கு பிழை என்றால், அதனை திருத்துமாறும் கிடைத்த பணத்திற்கு என்ன நடந்தது என்பதை தெளிவுபடுத்துமாறும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கின்றேன்.

உலகம் முழுவதும் தற்போது கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை ஏற்பட்டுள்ளது. இலங்கைக்குள் இரண்டாவது அலை ஏற்படுவதை தடுப்பது தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். எனினும் இது தொடர்பாக அரசாங்கம் இதுவரை எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து எந்த வகையிலும் திருப்தியடைய முடியாது. கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலையின் ஆபத்து காரணமாக பரிசோதனைகளை மேலும் அதிகரிக்க வேண்டும்.

பரிசோதனைகள் மற்றும் கண்டுபிடிப்புகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு நிதி இல்லை எனக் கூறி காலத்தை கடத்த வேண்டாம். உலக சுகாதார அமைப்பின் அறிவிப்புக்கு பின்னர், இலங்கைக்கு 230 மில்லியன் டொலர்கள் கிடைத்ததாக நான் கூறினேன்.


எனினும் உலக சுகாதார அமைப்பு 19 மில்லியன் டொலர்களை வழங்கியதாக சுகாதார அமைச்சர் கூறியிருந்தார்.

உண்மையில் உலக சுகாதார அமைப்பிடம் நிதியில்லை. அமெரிக்க உலக சுகாதார அமைப்புக்கு வழங்கும் நிதியை நிறுத்திய பின்னர், அந்த நிதியை உலக வங்கியும் ஐரோப்பிய ஒன்றியம் மாத்திரமல்லாது சில நாடுகளிடம் இருந்து கிடைத்தன எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# எம்.சி.சி.ஒப்பந்த விவகாரம்

## இராஜதந்திர ரீதியாக கையாளப்படுகிறதாம்

### அரசாங்கம் கூறுகிறது



(கொழும்பு)

மிலேனியம் சலன்ஞ் கோப்ரேசன் எனப்படும் எம்.சி.சி. ஒப்பந்த விவகாரத்தை இராஜதந்திர ரீதியாக கையாள்கிறோம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது. அரசாங்கதகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அங்கு உரையாற்றிய அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன மேலும் கூறுகையில்,

கடந்த அரசாங்கத்தினால் இரு சந்தர்ப்பங்களில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை திடீரென விலக்கிக்கொள்ள முடியாது. ஆனால் நாட்டின் இறையாண்மை மற்றும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு ஒப்பந்தத்தையும் ஜனாதிபதி கைச்சாத்திடமாட்டார்.

எனவே எம்.சி.சி.ஒப்பந்தம் குறித்து அரசாங்கம் இராஜதந்திர ரீதியில் கையாள்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# பொலிஸ் பரிசோதகரை தேடி சிறப்பு நடவடிக்கை

## கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் மீள கடத்தல்காரர்களுக்கு விற்கப்பட்டதா? என்ற கோணத்தில் விசாரணை தீவிரம்

### அஜித் ரோஹண தகவல்



(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல் காரர்களுடன் தொடர்பிலிருந்து, கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களில் ஒரு பகுதியை கடத்தல் காரர்களுக்கே மீள விற்பனை செய்ததாக கூறப்பட்ட விடயத்தில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் 4 அதிகாரிகள் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களிடம் தடுப்புக் காவலில் விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெறுவதாக பொலிஸ் சட்டப் பிரிவு பிரதானி பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இதில் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் நால்வருக்கும்தலைமை வகித்ததாக கூறப்படும், பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவரை கைது செய்ய தேடி வரும் நிலையில், அவர் நாட்டிலிருந்து தப்பிச் செல்லாமல் இருக்க அவருக்கு எதிராக வெளிநாட்டுப் பயணத்தடையும் பெறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். அத்துடன் நிரந்தர போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் கும்பல் பயன்படுத்திய 5 ஆயுதங்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில், நேற்று முன்தினம் மாலை, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரட்னவுடன்இணைந்து நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பின் போதே பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன இந்த குறித்த விடயங்களை வெளிப்படுத்தினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த விவகார விசாரணைகளில் 25 பேரைக் கொண்ட சி.ஐ.டியின் மூன்று குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவில் குற்றம் சாட்டப்பட்டுள்ள, கைதுசெய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்களை மேற்பார்வை செய்த உயர் அதிகாரிகள் பொறுப்பை மீறி செயற்பட்டுள்ளனரா?என்பது குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் ஹெரோயின் போதைப்பொருள் தொடர்பிலான பேச்சுக்கள் 1979 ஆம் ஆண்டே. முதன் முதலில் இடம்பெற்றுள்ளது. அதன் பின்னர் 1981 ஆம் ஆண்டு இலங்கையில் ஹெரோயினுடன் முதலாவது சந்தேக நபர் ஹிக்கடுவையில் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறான பின்னணியிலேயே போதைப்பொருள் குற்றங்களுக்கு எதிராகச் செயற்பட விசேட பிரிவாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு உருவாக்கப்பட்டு கடந்த 3 தசாப்தங்களாக அந்தப் பிரிவு இயங்குகின்றது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரினால் மேற்பார்வை செய்யப்படும் அந்த பிரிவில் ஒரு பணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர், 3 உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் உட்பட 300 உத்தியோகத்தர்கள் வரை உள்ளனர்.

அவர்களில் ஒரு சில உத்தியோகத்தர்கள் செய்துள்ள வெட்கித் தலைகுனியும் செயல்களால், நாம் போதைப்பொருள் குறித்த சுற்றிவளைப்புக்களை நிறுத்தப் போவதில்லை.

குற்றம் இழைத்துள்ள ஒரு உப பொலிஸ் பரிசோதகர், இரு சார்ஜன்கள், ஒரு கான்ஸ்டபிள் எமது சிறப்பு விசாரணையாளர்களான சி.ஐ.டியினர் கைது செய்துள்ளனர். நாம் இந்த விடயத்தை மூடி மறைக்கவில்லை. விசாரணைகள் தொடர்கின்றன.

மேலும் பொலிஸ் அதிகாரிகளோ யாரோ, இந்த போதைப் பொருள் கடத்தல் விவகாரத்தில் தொடர்புபட்டிருந்தால் அவர்களையும் கைது செய்ய நாம் பின்னிற்கப் போவதில்லை. நாட்டின் குற்றவியல் சட்டத்துக்கு அமையவும் பொலிஸ் ஒழுக்காற்று விதிமுறைகளின் கீழும் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

இதுவரையிலான விசாரணைகளில், கைது செய்யப்பட்ட பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் நால்வரிடமிருந்தும் இரு வான்கள், ஒரு பஜரோ ஜீப் வண்டி உள்ளிட்ட வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறிப்பாக இந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக முதலில் விடயங்களை வெளிப்படுத்தியவர்கள் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரே, அவர்களின் வெளிப்படுத்தலுக்கு அமையவே இந்த விவகார விசாரணைகள் சி.ஐ.டியிடம் கையளிக்கப்பட்டன" என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார். (ஜ-2)



நாடாளுமன்றத் தேர்தல்-2020 (வன்னித் தேர்தல் மாவட்டம்)
தமிழ் மக்கள் தேசிய கூட்டணி
வன்னி மக்களின் முன்னேற்றமே எனது குறிக்கோள்

X 2 X
கோபாலசாமி சற்குணபாலன்
ஓய்வுநிலை முகாமையாளர், மக்கள் வங்கி,
கிளிநொச்சி R.D.B.வங்கி

தன்னாட்சி-தற்சார்பு-தன்னிறைவு
(010)

- தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க
- இனப்படுகொலைக்கு நீதி கிடைக்க
- நம்மை ஏமாற்றியவர்களுக்கு பாடம் புகட்ட
- எமது உரிமைகளை வென்றெடுக்க



# உங்கள் வாக்குகளை எமக்குத் தாருங்கள்
# நீதியரசர் விக்னேஸ்வரன் அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

**எனது வாழ்நாளில் நூற்றுக்கணக்கான தீர்ப்புக்களை வழங்கிய நான், இன்று தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பில் ஒரு முக்கியமான தீர்ப்பினை இந்தத் தேர்தலின் ஊடாக வழங்குமாறு எனதருமை மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன். நீங்கள் வழங்கும் இந்தத் தீர்ப்பு எமது தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு எமக்கு வலுச் சேர்ப்பதாக அமையட்டும்! இனப்படுகொலைக்கு நீதியை பெற்றுத்தருவதாக அமையட்டும்! உங்களை ஏமாற்றியவர்களுக்கு பாடம் புகட்டுவதாக அமையட்டும்! நீங்கள் சென்றமுறை வழங்கிய அதிகாரத்தை அரசாங்கத்துக்கு முண்டுகொடுத்து சலுகைகளை அனுபவித்தவர்களுக்கு தண்டனை வழங்குவதாக அமையட்டும்! எமது உரிமைகளை வென்றெடுக்கும் வரை நாம் ஓயமாட்டோம் என்பதை அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துக் கூறுகின்றேன் என சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் கருத்துப்பரப்புரைக் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை கிளிநொச்சி அலுவலகத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றும் போதே முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது முதலாவது தேர்தல் பிரசார கூட்டத்தை நாம் தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் மிக்க வட்டுக்கோட்டை தீர்மானம் மேற்கொள்ளப்பட்ட இடத்தில் இருந்து ஆரம்பித்தோம். அந்த கூட்டத்தில் நான் ஆற்றிய உரையில் வட்டுக்கோட்டை தீர்மானத்தைநாம் கைவிடுவதாக அறிவிக்கவில்லை என்று கூறி இருந்தேன்.

காரணம் சிலகட்சிகள் அதனை முற்றிலும் நிராகரித்தது போல் செயற்படுகின்றார்கள். இதுபற்றி என்னிடம் கேள்வி எழுப்பிய சிலர் அப்படியானால் தனிநாட்டு கோரிக்கையை நீங்கள் கைவிடவில்லை என்று இதன் மூலம் கூறுகின்றீர்களா என்று கேட்டார்கள்.

இதுபற்றி நான் சுருக்கமாக விளக்க வேண்டி இருக்கிறது. தமிழ் மக்களின் பூர்வீக பிரதேசங்களான இணைந்த வடக்கு, கிழக்கில் சுய நிர்ணய உரிமை அடிப்படையில் பகிரப்பட்ட இறையாண்மையுடன் கூடிய சமஷ்டி தீர்வு ஒன்றினை அடைவதே எனது கட்சி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நோக்கம் என்று தெளிவாகக் கூறியிருக்கின்றோம்.

அதேவேளை நாம் வட்டுக்கோட்டை தீர்மானத்தினை கைவிடுவதாக அறிவிக்கவில்லை என்று கூறியதும் உண்மைதான். வட்டுக்கோட்டை தீர்மானம் என்பது ஒரு வரலாற்று உண்மை. அதனை நாம் எமது வரலாற்று புத்தகத்தில் இருந்து அகற்றிவிட முடியாது. வட்டுக்கோட்டை தீர்மானத்தில் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதிலே, சமதர்மத் தமிழீழ அரசை உருவாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்ற ஒரு விடயம் தவிர ஏனைய அனைத்து விடயங்களும் இன்றும் அவசியமானவை மற்றும் பொருத்தமானவையும் கூட.

எந்தச் சந்தர்ப்பதிலும் தனிநாடு ஒன்றை அமைக்கப் பாடுபடப்போவதாக நாம் குறிப்பிட்டது கிடையாது. எமது கோரிக்கை சமஷ்டி அரசியல் முறை எனினும் தமிழ் மக்கள் ஒருதேசிய இனம், அவர்களின் சுய நிர்ணய உரிமை, சாதி ஒழிப்பு, சுரண்டல் ஒழிப்பு போன்ற பலவிடயங்களை வட்டுக்கோட்டை தீர்மானம் வலியுறுத்துகின்றது. இவற்றை தமிழ் மக்கள் ஒருபோதும் கைவிட முடியாது. ஆகவேதான் வட்டுக்கோட்டை தீர்மானத்தை நாம் கைவிட்டதாக அறிவிக்கவில்லை என்று கூறியிருந்தேன்.

இன்றையதினம் நாங்கள் எம்மக்களுக்காக ஒன்றிணைந்து உங்கள் முன் வாக்கு கேட்க வந்திருக்கின்றோம். எமது கூட்டணியில் வேறு சிலரையும் இணைத்துக் கொள்வதற்காக முயன்றிருந்தோம்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக் அது இம்முறை கைகூடி வரவில்லை. எதிர்காலத்தில் ஒத்த கொள்கையுடையவர்களை ஒன்றாக இணைப்பதற்காக தொடர்ந்து முயற்சிப்போம்.

எம்மை மாற்றுத் தலைமை என்று பலர் கூறுகின்றார்கள். ஆனால் மாற்றுத் தலைமை என்று கூறுவது நாம் மாற்றுக் கொள்கை ஒன்றை முன்வைத்திருக்கின்றோம் என்று பொருள் அல்ல. தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகள் எல்லாமே இணைந்த வடக்கு, கிழக்கில் சமஷ்டி தீர்வினையே கோருகின்றன. தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூட சமஷ்டி பற்றியும் வடக்கு, கிழக்கு இணைப்பு பற்றியும் இறையாண்மை பற்றியும் கூறிவந்துள்ளது.

ஆனால், அரசாங்கங்களுக்கு முண்டுகொடுப்பதன் மூலமும் இனப்படுகொலைக்கு நீதி கோரி எமது மக்கள் மேற்கொண்டு வரும் போராட்டங்களை மழுங்கடிப்பதன் மூலமும் அரசாங்கத்தை குளிரச் செய்து ஏதோ ஒரு தீர்வினைப் பெற்றுவிடலாம் என்ற வழி வரைபடத்தின் அடிப்படையிலும் தமிழ்தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வந்துள்ளது.

அத்துடன் தேர்தல்கள் முடிவடைந்தவுடன் சமஷ்டி கோட்பாடுகளையும் தாயகக் கோட்பாடுகளையும் சாத்தியம் அற்றவை என்று கூட்டமைப்பு காற்றில் பறக்க விடுவது வரலாறு. அது உங்களுக்குத்தெரியும்.

ஆனால், தமிழ்த் தேசியக் கோட்பாடுகளை அடைவதற்கான மாறுபட்ட வழிமுறைகளை முன்வைத்திருப்பதன் மூலமும் அவற்றைப் பற்றுறுதியுடன் தொடர்ந்து பின்பற்றுவதன் மூலமும் மாற்று அணியாக நாம் பரிணமித்துள்ளோம். 6 வருடங்களுக்கு முன்னர் முதலமைச்சராகப் பதவி ஏற்று யுத்தம் நடைபெற்ற பகுதிகளை பார்வையிட்டு, பொதுமக்களைச் சந்தித்து, எமது மக்களுக்கு எதிராக நடைபெற்றது இனப்படுகொலைதான் என்பதைப் பகுத்தறிந்து உணர்ந்து கொண்டேன்.

இதன்காரணமாக, எத்தகைய ஒரு பெரும் பொறுப்பு எம் தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது என்பதை நான் உணர்ந்து கொண்டேன். எத்தனை இடர் வந்தாலும் எமது உரிமைகள் விடயத்தில் எந்தவிதமான விட்டுக்கொடுப்புக்களையோ அல்லது காட்டிக்கொடுப்புகளையோ நான் செய்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தேன்.

அதனால் தான், கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்ட போதிலும் இனப்படுகொலை தீர்மானத்தை கைவிடவோ அல்லது பொறுப்புக்கூறல் விடயத்தில் விட்டுக்கொடுப்புக்களை செய்யவோ நான் தயாராக இருக்கவில்லை. உண்மையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வெள்ளம் பெருக்கெடுக்கும் போது நீரோ பிடில் வாசித்தது போல்தான் நடந்துகொண்டிருந்தார்கள். பிரச்சினைகளை அப்படியே விட்டுவிட்டு தமது சுயலாபச் சிந்தனைகளில் இலயித்திருந்தார்கள்.

எனக்கு சிங்கள மக்கள் மற்றும் அரசியல்வாதிகளுடன் இருந்ததொடர்புகள் காரணமாக நான் அரசாங்கத்துடன் இணைந்து அவர்களுக்கு ஏற்பதாளம் போட்டிருந்தால் அல்லது அவர்களை நெல்சன் மண்டேலாவுக்கு ஒப்பிட்டு துதிபாடி இருந்திருந்தால் எனது மாகாண சபைக்கு பலமடங்கு நிதியை அவர்கள் ஒதுக்கி இருந்திருப்பார்கள். பலசெயற்றிட்டங்களை இங்கு முன்னெடுக்க அனுமதி வழங்கி இருப்பார்கள். ஆனால், அவ்வாறு செய்திருந்தால், தமிழ் மக்களின்பலதசாப்தகால உரிமை போராட்டங்களுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தி பெரும் துரோகத்தை நான் இழைத்திருப்பேன்.

அதனால் நான் அத்தகைய தவறை செய்யவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டுமல்ல, அப்போதைய பிரதமர் மற்றும் ஜனாதிபதியுடன் நான் பலதடவைகள் இதன் காரணமாக முரண்பட நேர்ந்தது. பலமாத காலம் ரணில் விக்கிரமசிங்க என்னுடன் பேசவில்லை எனது முகத்தைப் பார்ப்பதைக் கூட அவர் தவிர்த்து வந்திருந்தார்.

என்னைப் பொறுத்தவரையில், எனது 5 வருடகால முதலமைச்சர் காலத்தில் முடிந்தளவுக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை சிறப்பாக செய்திருக்கிறேன் என்ற திருப்தி எனக்கு இருக்கின்றது. அரசுடன் நான் முரண்பட்டதாலோ என்னவோ எமக்கு அரசாங்கம் போதிய நிதியை அனுப்பவில்லை. ஆனாலும் நாம் கிடைத்த நிதியை வைத்து சிறப்பாகவே செயற்பட்டிருக்கின்றோம். பல்வேறு திட்டங்களை மேற்கொண்டோம். புலம்பெயர் தமிழ்மக்களிடம் இருந்து நிதியைப் பெற்றுசில செயற்றிட்டங்களை மேற்கொண்டோம்.

ஆனாலும், அரசாங்கம் எதற்கும் ஒத்துழைப்பு வழங்கவில்லை. உதாரணமாக, நான் கனடா சென்றபோது அங்குள்ள சில அமைப்புக்கள் எமது மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களுக்காக ஒருதொகை நிதியை சேகரித்தார்கள்.

ஆனால், அந்த நிதியை நான் எடுத்து வரமறுத்து விட்டேன். சட்டப்படி அனுப்பப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். எனவே அப்பணத்தை இங்கு கொண்டு வருவதில் சிக்கல் இருந்தது. ஏன் என்றால் முதலமைச்சர் நிதியத்தைத் தாக்காட்டித் தாக்காட்டி கடைசியில் அனுமதிக்காது விட்டிருந்தார்கள் அரசாங்கத்தினர். தற்பொழுது நான் உருவாக்கியுள்ள நம்பிக்கை பொறுப்பின் ஊடாக அந்த நிதியைப் பெற நடவடிக்கைகள் எடுத்துள்ளேன். இதுபற்றி விபரமாக பின்னர் அறிவிப்பேன்.

வடமாகாண சபைக்கு முதலமைச்சர் நிதியத்தை அமைத்து புலம்பெயர் தமிழ் மக்களிடம் இருந்து நிதி உதவிகளை பெற்றுக்கொள்ள பகீரதப்பிரயத்தனம் மேற்கொண்ட போதிலும் அரசாங்கம் அதனை செய்யவிடாத காரணம் நிதியம் அனுமதிக்கப்பட்டால் எனக்கு மக்கள் மத்தியில் நல்லபெயர் கிடைத்துவிடும்என்று நினைத்துப்போலும். கூட்டமைப்பின் தலைவர்கள் கூட அவ்வாறு நினைத்தார்களோ என்னவோ அந்த நிதியத்தை உருவாக்கும்படி தாங்கள் முண்டுகொடுத்து வந்த அரசாங்கத்திடம் ஒருபோதும் கேட்கவில்லை. முற்றுமுழு தாக எமது மக்களின் நலன்களை முன்னிறுத்தாமல் வெறுமனே அரசியல் இலாபங்களை கருத்தில் கொண்டே கூட்டமைப்பு செயற்பட்டு வந்திருக்கின்றது.

ஆகவே, மக்களே தயவு செய்து தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் கடந்தகால செயற்பாடுகள் தொடர்பில் ஒரு மதிப்பீட்டை செய்து அதன்பின் இம் முறை தேர்தலில் வாக்களியுங்கள்.

எனது வாழ்நாளில் நூற்றுக்கணக்கான தீர்ப்புக்களை வழங்கிய நான், இன்று தமிழ் மக்களின் எதிர்காலம் தொடர்பில் ஒரு முக்கியமான தீர்ப்பினை இந்தத் தேர்தலின் ஊடாக வழங்குமாறு எனதருமை மக்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

நீங்கள் வழங்கும் இந்த தீர்ப்பு எமது தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்கு எமக்கு வலுச் சேர்ப்பதாக அமையட்டும்! இனப்படுகொலைக்கு நீதியை பெற்றுத் தருவதாக அமையட்டும்! உங்களை ஏமாற்றியவர்களுக்கு பாடம் புகட்டுவதாக அமையட்டும்! நீங்கள் சென்றமுறை வழங்கிய அதிகாரத்தை அரசாங்கத்துக்கு முண்டுகொடுத்து சலுகைகளை அனுபவித்தவர்களுக்கு தண்டனை வழங்குவதாக அமையட்டும்! எமது உரிமைகளை வென்றெடுக்கும் வரை நாம் ஓயமாட்டோம் என்பதை அரசாங்கத்துக்கும் சர்வதேச சமூகத்துக்கும் எடுத்துக் கூறுகின்றேன் என சி.வி.விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## இராசிபலன்

03.07.2020
ஆனி 19, வெள்ளிக்கிழமை
திரயோதசி பிற்பகல் 1.28 மணிவரை
கேட்டை பின்னிரவு 12.48 மணிவரை
சுபநேரம் 5.57-7.27 மணிவரை
இராகுகாலம் 10.27-11.57 மணிவரை
சந்திராஷ்டமம்:கார்த்திகை,ரோகினி வளவன்


மேஷம்

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் சில இடையூறுகள் ஏற்படலாம்.


ரிஷபம்

மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், முயற்சிகளில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், வருமானம் திருப்திதரும்.


மிதுனம்

ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் அகலும், கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.


கடகம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


சிம்மம்

பெற்றோர் மீதான பாசம் கூடும், நண்பர்கள் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், மறக்க முடியாத இனிய சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு.


கன்னி

உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.


துலாம்

வார்த்தைகளால் மேன்மையடைவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், தொழில் நலன்கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.


விருச்சிகம்

வழிபாட்டுச்சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு.


தனுசு

வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், பிரியமான ஒருவரைச் சந்திக்கும் வாய்ப்புண்டு, ஊர் மாற்றம், இடமாற்றம் என்பன ஏற்படலாம்.


மகரம்

வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பொன்னான நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கும்பம்

என்றோ நடக்கும் என நினைத்த காரியம் நல்லவிதமாக நடைபெறலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும், தொழிலில் ஆர்வத்துடன் பணிபுரிவீர்கள்.


மீனம்

கடுமையான எதிர்ப்புகள் கூட திடீரென சாதகமாகிவிடும், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

எல்லையற்ற இந்தப்பிரபஞ்சத்தின் மகாசக்தி உனக்குள்ளே இருக்கிறது.

# திடீரென்று மாயமான நட்சத்திரம் ஆராய்ச்சியில் வானியலாளர்கள்

(கொழும்பு)
அவதானிக்கப்பட்டு வந்த இராட்சத நட்சத்திரமொன்று திடீரென காணாமல் போயுள்ளது.

இந்த நிலையில் குறித்த தொலைதூர நட்சத்திரம் ஒரு சுப்பர் நோவாவாக வெடிக்காமல் கருந்துளை ஒன்றுக்குள் விழுந்துள்ளதா? என்பது தொடர்பில் வானியலாளர்கள் ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளனர்.

அவ்வாறு நடந்திருந்தால் பெரிய நட்சத்திரம் ஒன்று இந்த வகையில் வாழ்வை முடித்துக்கொண்ட முதல் உதாரணமாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இதற்கு வேறு சாத்தியங்களும் இருக்கக் கூடும் என்று இந்த ஆய்வு பற்றிய விபரத்தை வெளியிட்டிருக்கும் வானியல் சஞ்சிகை ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த நட்சத்திரம் கின்மான் பால்மண்டலத்தில் சுமார் 75 மில்லியன் ஒளியாண்டுத் தொலைவில் உள்ளது. இது எமது சூரியனை விடவும் சுமார் 2.5 மில்லியன் மடங்கு ஒளிரக் கூடியது.

2001 தொடக்கம் 2011 வரை இந்த நட்சத்திரம் பற்றி பல வானியலாளர் குழுக்கள் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளன என்ற போதும் 2019 இல் இதுபற்றி ஆய்வு மேற்கொள்ள அயர்லாந்தின் டப்லின் ட்ரினிட்டி கல்லூரி முயன்றபோது இந்த நட்சத்திரம் காணாமல் போயுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# கலைஞர்களை பாதுகாக்க உதவுவதாக ஜனாதிபதி உறுதியளிப்பு

(கொழும்பு)
கொவிட் நோய்த்தொற்றை ஒழித்து உலக நிலைமைகள் சீராகும் வரை பார்த்திராது கலைஞர்களை தேசிய பொருளாதாரத்துடன் இணைத்து பாதுகாப்பதற்கு உதவுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பல சந்தர்ப்பங்களில் கலைஞர்கள் அவ்வாறு இணைத்துக்கொள்ளப்பட்டார்கள். அதன் மூலம் அனைத்து மட்டங்களிலும் கலைஞர்களுக்கு தமது படைப்பு ரீதியான பங்களிப்பை வழங்க முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கடந்த காலத்திலும் கொவிட் நோய்த்தொற்றின் காரணமாகவும் இழந்த சந்தர்ப்பங்களை மீண்டும் உருவாக்குவதற்கான பின்புலத்தை ஏற்படுத்துமாறும் ஜனாதிபதி சுட்டிக் காட்டினார்.

கலைஞர்கள் முகம்கொடுத்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

9 ஆம் வகுப்பில் நிறுத்தப்படும் அழகியல் பாடத்தை க.பொ.த.சாதாரண தரம் வரை பிள்ளைகளுக்கு கற்பிக்க வேண்டியதன் அவசியத்தை பேராசிரியர் முதியன்சே திஸாநாயக்க சுட்டிக்காட்டினார். இந்த முன்மொழிவை தேசிய கல்விக்கொள்கைக்கான செயலணிக்கு சமர்ப்பிப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தயாரிப்பாளர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைத் தொகை கிடைக்கப்பெறாமைக்கான காரணங்கள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. சர்வதேச ரீதியாக 20 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகையை இதன் காரணமாக நாடு இழந்துள்ளது.

இலத்திரனியல் ஊடகங்களினூடாக ஒளிபரப்பப்படும் பாடல்களுக்கும் உரிமைத் தொகை கிடைக்கப்பெறாமை குறித்து கலைஞர்கள் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டனர். இதுபற்றி அரச மட்டத்தில் நடவடிக்கை எடுத்த கலைஞர்களின் உரிமையைப் பாதுகாப்பதாக ஜனாதிபதியும் பிரதமரும் தெரிவித்தனர். (ஜ-4)

## குணமடைந்தோர் 1827

(கொழும்பு)
நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 827 ஆக அதிகரித்துள்ளது.

வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 79 பேர் பூரண குணமடைந்து நேற்று வியாழக்கிழமை வைத்தியசாலையில் இருந்து வெளியேறியுள்ள நிலையில் இந்த அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-4)


யாழ் கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)
சனி – ஞாயிறு மற்றும் கிழமை நாள் பிரிவுகள் மீண்டும் ஆரம்பமாகின்றன.
மேலும் விபரங்களை மாணவர்கள் நேரில் அறிந்து கொள்ளலாம்.
இயக்குநர்
(C-9817)


## முதலாம் ஆண்டு திவச அழைப்பு



கடந்த 16.06.2019 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர்.வைரமுத்து சிவசாமி

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்தி திவசக் கிரியைகள் 03.07.2020 இன்று வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி வீதி,
கம்பர்மலை.

குடும்பத்தினர்
0778273150, 0779112135



மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம் அருள்மிகு சிறி ஞானதுர்க்கை அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன சம்புரோக்ஷண மஹா கும்பாபிஷேகம் நேற்று நடைபெற்றது.

## அரச ஊழியர் எனக் கூறி பொதுமக்களை ஏமாற்றிய நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தில் ஆவணங்களைப் பெற்றுத்தருவதாகக் கூறி அங்கு வருகை தரும் பொதுமக்களிடம் பண மோசடியில் ஈடுபட்ட நான்கு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்.மாவட்ட செயலகத்திற்கு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் வருகைதரும் பொதுமக்களைக் கண்டறிந்து தங்களை யாழ்.மாவட்ட செயலகத்தில் பணிபுரியும் அரச உத்தியோகத்தர்கள் என அறிமுகப்படுத்தி தாம் இலகுவாக ஆவணங்களைப் பெற்றுத்தருவதாகக் கூறி ஆவணத்திற்கு அறவிடப்படும் பணத்தினை விட அதிகளவான பணத்தினை அறவிட்டு ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டு வந்த நான்கு நபர்களை மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினர் நேற்று முற்பகல் 11 மணியளவில் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் நாவற்குழி, கைதடி, நல்லூர் மற்றும் யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்த நபர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (5-32)



யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுக்காலை நாகவிகாராதிபதியிடமும் நல்லை ஆதீன குருமுதல்வரிடம் ஆசி பெற்றார்.

## கூட்டுறவு தினம் நாளை

(யாழ்ப்பாணம்)

நாளை 98 ஆவது அனைத்துலக கூட்டுறவு தினம் எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபைக்குட்பட்ட சங்கங்களின் தலைவர், பணிப்பாளர் மற்றும் பணியாளர்கள், கூட்டுறவாளர்கள் இணைந்து சங்க மட்டத்தில் நாளை காலை 9 மணியளவில் கூட்டுறவுக் கொடியை ஏற்றி கூட்டுறவுக் கீதம் இசைத்து 98 ஆவது அனைத்துலக கூட்டு றவு தினத்தை நினைவு கூரு மாறு யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைச் செயலாளர் வே. செல்வரத்தினம் கேட்டுக்கொண்டுள்ளார். (5)

## வாளுடன் இளைஞன் கைது

(சாவகச்சேரி)

தென்மராட்சி-நாவற்குழிப் பகுதியில் ஆபத்தான கூரிய வாள் ஒன்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 24வயது இளைஞன் ஒருவர் சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இளைஞனை அன்றைய தினமே சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4-5-30)

## வாக்குறுதி கொடுத்துவிட்டு ஓடுபவர்கள் நாங்களல்ல

### மக்கள் பிரச்சினைக்குத் தீர்வே எமதிலக்கு–சஜித்



(யாழ்ப்பாணம்)

வாக்குறுதி அளித்துவிட்டு ஓடிச் செல்பவர்கள் நாங்கள் அல்ல. மக்களுக்கு இருக்கும் அரசியல், அபிவிருத்தி, வணக்கஸ்தலங்கள் சார்ந்த பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முயற்சிப்போம் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பொதுத்தேர்தலில் நாம் வெற்றி நினைப்பது நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்காகவே.

திருடர்கள், மண்கொள்ளையர்கள் மற்றும் துரோகம் புரிபவர்களுடன் நாம் சேர்ந்து நிற்க மாட்டோம். நாங்கள் ஒரு நேர அட்டவணையின் படி செயற்படுவர்கள்.

ஊடகவியலாளர்கள் கடத்திக் கொலை செய்யப்பட்டது வடக்கா?, கிழக்கா?, தெற்கா? என்பது விடயமல்ல. நாட்டில் நடைபெற்ற அவ்வாறான சம்பவங்கள் தொடர்பான பூரண விசாரணை மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடுகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (5-8)

## இரத்ததானம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் சிற்றி லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இரத்ததானமுகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிதல் ஆனைப்பந்தி பருத்தித்துறை வீதி யிலுள்ள ஈ–சிற்றி கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தேவை ஏற்படின் குருதிக் கொடையாளர்கள் 077 340 0418, 077 791 7748, 077 656 9870, 077 866 6155 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (4-5-18)



மன்னார் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபராக கடமையாற்றி ஓய்வு பெறும் சி.ஏ. மோகன்றாஸ் இற்கான பிரிவு உபசார நிகழ்வு நேற்று மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது. (படம்:- மன்னார் செய்தியாளர்)

## பிரிட்டன் துணைத்தூதுவர் யாழ்.அரச அதிபர் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

பிரித்தானிய தூதரகத்தின் பிரதித் தூதுவர் நெஜில் கவனாக் மற்றும் அரசியல் செயலாளர் சிவோன் லைதம் ஆகியோர் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசனை நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.


வடக்கில் அரச மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள், கொரோனாப் பாதிப்பின் போது யாழ்ப் பாணத்தில் எவ்வாறான நிலைமை காணப்பட்டது.

தற்போதைய யாழ்ப்பாண நிலவரம் தொடர்பாகவும் கேட்டறிந்த பிரதித் தூதுவர், யாழ்ப்பாணத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் கேட்டறிந்தார்.

எதிர்காலத்தில் வடக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு தங்களாலான ஒத்துழைப்பு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (5-33)

# உயிர்த்த ஞாயிறு தற்கொலைத் தாக்குதல் தொடர்பான சிறுவர்களின் வாக்குமூலம் ஊடகங்களுக்கு கசிந்தது எப்படி?

## சிறப்பு விசாரணைக்கு நீதிமன்று உத்தரவு



(கொழும்பு)

**உயிர்த்த ஞாயிறு தின தொடர் தற்கொலை தாக்குதல்கள் குறித்த விசாரணைகளுக்காக கைது செய்யப்பட்டு சி.ஐ.டி.யில் தடுத்து வைக்கப் பட்டுள்ள சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் விவகாரத்தில், நீதிமன்றுக்கு அளிக்கப்பட்ட இரகசிய வாக்கு மூலங்களில் உள்ள விடய ங்கள் ஊடகங்களுக்கு கசிந்தது எப்படி என சிறப்பு விசாரணைகளை நடத்துமாறு கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்க நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.**

குற்றவியல் அட்டத்தின் 127 ஆவது அத்தியாயத்தின்பிரகாரம், இரு சிறுவர்கள் கடந்த மே 12 ஆம் திகதி, கோட்டை நீதிவான் முன்னிலையில் இரகசிய வாக்கு மூலம் அளித்துள்ள துடன், அவ் வாக்கு மூலம் சீல் செய்யப்பட்டு பாதுகாப்பாக வைக் கப்பட்டுள்ளது. அவ்வாறான பின்னணியில், அந்த வாக்கு மூலத்தில் கூறப்பட்டதாக தெரிவித்து சில விடயங்களை கடந்த மே 13 ஆம் திகதியன்று சில ஊடகங்களில் செய்தியாக வெளியிட்டுள்ளன.

இந் நிலைமையானது நீதி மன்றின் நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுத்து செல்வது குறித்த பிரச்சினை ஏற்படுத்தியுள்ளது. அதனால் இது குறித்து உடன் விசா ரணை தேவை.

குற்றவியல் சட்டத்தின் 127 ஆம் பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட இரகசிய வாக்கு மூலம் எவ் வாறு ஊடகங்களுக்கு சென்றன என விசாரணை நடத்துமாறு மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடுகின்றேன்." என நீதிவான் திறந்த மன்றில் அறிவித்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ்வை நீதிமன்றில் ஆஜர் செய்ய உத்தரவிடுவதா இல்லையா என்ற நீதிமன்ற உத்தரவை எதிர்பார்த்து நேற்று முன் தினம், அது குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள் ளப்பட்டது.

இதன்போது சி.ஐ.டியினர் சார்பில் பிரதான பொலிஸ் பரிசோதகர்களான ரவீந்ர விம லசிறி, கருணாதிலக மற்றும் சுதத் குமார ஆகையோர் மன் றில் ஆஜராகினர்.

சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் சார்பில் சட்டத்தரணிகளான ஹபீல் பாரிஸ், சமிந்த அத்துகோரள, ரணிலா சேனாதீர, சஞ்சீவ, ஹசான் நவரத்ன பண்டார ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணி வசந்த நவரத்ன பண்டார ஆஜரானார்.

இதன்படி, பயங்கரவாத தடை சட்டத்தின் 7(1), 7 (2) ஆம் பிரிவுகளை விஷேடமாக ஆராய்ந்த நீதிவான், அச் சட் டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு அச்சட்டத்தில் 9 (1) ஆம் அத் தியாயத்துக்கு அமைய தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரை, விசாரணையாளர்கள் சந்தேக நபராக கூட பெயரிட்டிராத நிலையில், அவரை மன்றில் ஆஜர் செய்ய உத்தரவிட தன க்கு அதிகாரம் இல்லை என அறிவித்தார்.

இங்கு அடிப்படை உரிமை மீறல் குறித்த தெளிவான அவதானிப்பு இருப்பினும் கூட நீதிவான் எனும் வகையில் தனக்கு பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஒருவரை மன்றில் ஆஜர் செய்ய கட்டளை பிறப்பிக்க சட்ட ரீதியிலான இயலுமை இல்லை என சுட்டி க்காட்டி, ஹிஜாஸ் ஹிஸ்பு ல்லாஹ் சார்பிலான கோரிக் கையை நிராகரித்தார்.

இந் நிலையிலேயே ஜனா திபதி சட்டத்தரணி வசந்த நவர த்ன பண்டார முன் வைத்த விஷேட விடயங்களை ஆரா ய்ந்த நீதிமன்றம், நீதிமன் றுக்கு வழங்கப்பட்ட இரகசிய வாக்கு மூலம் எப்படி ஊடகங் களுக்கு சென்றது என விசா ரிக்க கட்டளை பிறப்பித்து வழக்கை எதிர்வரும் ஓகஸ்ட் 19 ஆம் திகதிக்கு ஒத்திவைத் தார். (ஜ-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: செவ் 5 இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ/த. கிராம அலுவலர்<br>எதிர்பார்ப்பு: தனியார் அரச உத்தியோகம் பார்க்கும் பெண்<br>தொ.இ: B/10893 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: செவ் 12இல் உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: Diploma, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன் சைவபோசனம் உடையவர் மட்டும்<br>தொ.இ: G/8298 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 29 ¼ செவ் 12 இல் உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:க.பொ.த.உ/த. Account Manager<br>எதிர்பார்ப்பு:அரச,தனியார் உத்தி யோகம்<br>தொ.இ: B/10895 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 35 செவ் 2இல் உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா/த.<br>எதிர்பார்ப்பு: ஏதாவது தொழில்<br>தொ.இ: G/8309 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா: 55 ¾ செவ் 7 இல் உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: HNDIT, முன்னணி சொந்த வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10896 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கிபா: 28 ¾ செவ் 1இல் உயரம் 168 cm<br>தகைமை/தொழில்:பட்டதாரி வங்கி ஊழியர்<br>எதிர்பார்ப்பு: அரச நிரந்தரத் தொழில், பட்டதாரி வடமராட்சி பிரதேசம் விரும்பத்தக்கது<br>தொ.இ: G/8321 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: செவ் 3 இல் உயரம்: 6"<br>தகைமை/தொழில்: Computer Hardware and Software, Diploma in IT, Computer Hardware Technician (Private)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/10897 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பரணி1<br>கி.பா: 39 3/4 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. குடும்பநல உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம் பார்ப்பவர்<br>தொ.இ: G/8323 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


## இடுகம கொவிட்-19 சமூக பாதுகாப்பு நிதிய வைப்பு ஆயிரத்து 423 மில்லியனாக அதிகரிப்பு

(கொழும்பு)

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் இடுகம கொவிட் - 19 சுகாதார, சமூக பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 423 மில்லியனாக அதிகரித்துள்ளது.

பிரதமர் அலுவலகம் 3 இலட்சத்து 61 438.32 ரூபாவையும் வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (HDFC) வங்கி 12 இலட்சம் ரூபா வையும் இலங்கை கண்தானச் சங்கம் ஒரு இலட்சத்து 787.40 ரூபாவையும் NSB Fund Management Co.Ltd 10 இலட்சம் ரூபாவையும் Sri Lanka Savings Bank Ltd 10 இலட்சம் ரூபாவையும் திருமதி டி.எம்.எம்.திசா நாயக்க 5 ஆயிரம் ரூபாவையும் சனத் சந்ரசிறி பத்திரன 5 ஆயிரம் ரூபாவை யும் சிறுமி Marzook Morita Saara 4 ஆயிரத்து 30 ரூபாவையும் நிதியத் திற்கு அன்பளிப்புச் செய்துள்ளனர். அதற்கான காசோலைகள் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து பிரதமரால் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப் பட்டன.

வரையறுக்கப்பட்ட கூட்டுறவு பிரதேச கிராமிய வங்கி சங்கம் 5 இலட்சம் ரூபாவையும் கமநல அபிவிருத்தி திணைக்களம் 44 இலட்சத்து 20 ஆயி ரத்து 158 ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்தனர். அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஜனாதிபதி அலுவலகத்தில் வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவிடம் அதற்கான காசோலை களை கையளித்தார்.

தேசிய மொழிக் கற்கைகள் மற்றும் பயிற்சி நிறுவனம் அன்பளிப்புச் செய்த 3 இலட்சத்திற்கான காசோலை ஜனக பண்டார தென்னக்கோனால் ஜனாதிபதி யிடம் கையளிக்கப்பட்டது.

லேல்வள பந்துசேன குறுகே 50 ஆயிரம் ரூபாவிற்கான காசோலையை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

திருமதி.ஜே.ஏ.டி.எனஸ்டா 25 ஆயிரம் ரூபாவையும் கொழும்பு மாநகர சபையின் மேயர் ரோஷி சேனாநாயக்க 30 ஆயிரம் ரூபாவையும் மகாபொல உயர்கல்வி புலமைப்பரிசில் நிதியம் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 500 ரூபா வையும் உயர் கல்வி தொழில்நுட்ப புத்தாக்க அமைச்சின் விஞ்ஞான தொழில்நுட்ப மனிதவள அபிவிருத் தித்திட்டம் ஒரு இலட்சத்து 8891.13 ரூபாவையும் கலாநிதி சங்கைக்குரிய ஹாரிஸ்பத்துவே ஆரியவங்சாலங்கார மாஹிமி மன்றம் 50 ஆயிரம் ரூபாவை யும் தமிழ் கலைஞர்கள் சங்கம் 20 ஆயிரம் ரூபாவையும் Friends Lanka Child Foundation 6 இலட்சம் ரூபா வையும் எல்.ஜி.பீட்டர் 5 ஆயிரம் ரூபாவையும் எல்.சச்சிதானந்தன் 2 ஆயிரம் ரூபாவையும் கே.எஸ்.கே. விஜயரத்ன 35 ஆயிரம் ரூபாவையும் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ள னர்.

தற்போது இடுகம கொவிட்-19 சுகா தார, பாதுகாப்பு நிதியத்தின் மீதி 1,423, 421,045.71 மில்லியன் ரூபாவா கும். (ஜ-4)

## மின் கட்டணம் தொடர்பில் ஆராய குழு நியமனம்

(கொழும்பு)

மின்சாரப் பாவனையாளர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக 4 பேர் அடங்கிய குழு வொன்று நியமிக்கப்பட்டு ள்ளது. இதற்கான நடவடிக்கையை மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் மகிந்த அமரவீர மேற்கொண்டுள்ளார்.

மார்ச்; ஏப்ரல் மற்றும் மே மாதங்களு க்கான மின்சாரக்கட்டணம் தொடர்பிலான முரண்பாடுகளை ஆராய்ந்து பொது மக்களுக்கு நிவாரணம் வழங்க இந்த நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-4)





மன்னார் மருதமடுத் திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா திருப்பலி நேற்று வியாழக்கிழமை காலை 6.15 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

கடந்த ஜூன் மாதம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான திருவிழா நிகழ்வுகளில் தொடர்ந்து நவநாள் ஆராதனை திருப்பலிகள் இடம்பெற்று நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை நற்கருணை ஆராதனை இடம்பெற்றது.

இதில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை , குருநாகல் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி கரல்ட் அன்ரனி பெரேரா, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி நோயல் இம்மானுவேல் ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக தமிழ், சிங்கள மொழிகளில் ஒப்புக் கொடுத்தனர். (படங்கள்:-மன்னார் செய்தியாளர்)



முல்லைத்தீவு தான்தோன்றீஸ்வரர் ஆலய வேட்டைத் திருவிழா நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

அடியார்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிக் கலந்து கொண்டனர்.

# கிளிநொச்சி கல்வியில் முன்னேற்றமடைய அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டமானது தற்போது கல்வியில் கணிசமான அளவு வளர்ச்சி கண்டு வருகின்றபோதும் இலங்கையின் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகவே கருதப்படுகிறது. கல்வி நிலைமையை முன்னேறுவதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

மாவட்டத்தின் சிறுவர் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா காலத்தில் கூடுதலான சிறுவர்கள் வியாபாரம் உள்ளிட்ட தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும் போது பாடசாலைகளில் சமூக இடைவெளி பேணப்படுவதுடன் முகக்கவசங்களை அணிந்தும் கைகளை கழுவி உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். சமூகத்தில் சிறுவர்களின் பாதுகாப்பு மிக முக்கியமானது என்பதை எல்லோரும் உணர்ந்து தங்களது சேவைகளை வழங்க வேண்டும்.

சிறுவர் அபிவிருத்திக் குழுவின் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்குமாறும் அது தொடர்பான கிராம மற்றும் பிரதேச மட்ட கலந்துரையாடல்களையும் முன்னெடுக்க முடியும் எனக் குறிப்பிட்ட அவர், கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி கணிசமானளவு முன்னேற்றத்தைக் கண்டாலும் இலங்கையில் கல்வியில் பின்தங்கிய மாவட்டமாகவே காணப்படுகின்றது. இதனை முன்னேற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு ஆசிரியர்கள், பெற்றோர்கள் தமது பணிகளைத் தொடர வேண்டும் எனவும் குறிப்பிட்டார். இக்கலந்துரையாடலில் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர்கள், சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர், வைத்திய அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர். (5-315)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2064

Search for people, places and things

### அபி



அர்த்தமில்லாத ஒரு சில சண்டையால் அர்த்தமுள்ள ஆயிரம் சந்தோஷங்கள் வாழ்க்கையில் தொலைந்து போகின்றன...!

### விஸ்ணு



உன்னை யாரும் கண்டு கொள்ளவில்லை என கவலை கொள்ளாதே... நீ தேவைப்படும் போது தேடப்படுவாய்... அதுவரை காத்திரு ஏனென்றால் இது தேவைக்காக மட்டும் பயன்படும் உலகமே...

### ஜங்கரனி



தவறோ, சரியோ... தைரியமாக எதையும் வெளிப்படையாக பேசக் கூடியவர்கள் யாருக்கும் துரோகியாக மாற மாட்டார்கள்..!

### துதி

உன் மனம் வலிக்கும் போது சிரி
பிறர் மனம் வலிக்கும் போது சிரிக்க வை

### சுபராம்



ஒருவர் உங்களைத் தாழ்த்திப் பேசும் போது ஊமையாய் இருங்கள்..! புகழ்ந்து பேசும் போது செவிடாய் இருங்கள்... எளிதில் வெற்றி பெறுவீர்கள்..!

### தர்சனா



அன்பா பேசுறவங்க எல்லோர் மனசிலையும் அன்பு இருக்காது ஆனால் உரிமையோட சண்டை போட்டு கோபப்படுறவங்க மனசில ஆழமான அன்பு அழியாம இருக்கும்..

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# "நல்லன எல்லாம் தரும் நயினை நாகபூஷணித் தாய்"

வட இலங்கையில் வரலாற்று மகிமையும், வழிபாட்டுச் சிறப்பையும் கொண்ட நாற் புறமும் கடலால் சூழப்பெற்ற சப்த தீவுகளில் மணிபல்லவம் எனப்படும் தனிப் பெரும் சிறப்பு மிக்கது நயினாதீவு. அலைகடல் நடுவே வீற்றிருந்து அருளாட்சி செய்கின்ற அன்னை பராசக்தி கோவில் கொண்டு எழுந்தருளி



யுள்ள பதியே நயினையம்பதி யாகும்.

சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள் புவனேஸ்வரி பீடம் என அழைக்கப்படும் தனிச் சிறப்பை அன்னையவள் பெற்று விளங்குகிறாள். அம்பிகையின் மூல விக்கிரகத்தின் தோற்றம், அதன் வரலாறு இன்னமும் கண்டறிய முடியாத அதிசயமாகக் காணப்படுகிறது.

நயினை நாகபூஷணி அம்மனின் அருளாசி, தனிச் சிறப்பானது மண்ணில் நல்ல வண்ணம் வாழ, நற்கருமங்களின் பொருள் பேசுவது நம்பிக்கையோடு வழிபாடு செய்யும் அடியவர்களது நோய் நொடிகள் அத்தனையும் நீக்கி அருளும் சக்தியாகவும், குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு குழந்தைப் பேறு அளிக்கும் பேரருள் சக்தியாக அன்னை நாகபூஷணி அருளாசி புரிகின்றாள்.

ஆலய கிழக்கு வாயில் கோபுரம் நூற்று எட்டு அடி உயரம் கொண்டது. அலை கடல் தாண்டி ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் பக்தியின் பரவசத்தினை உவந்தளிக்கின்றது.

**நாகபூஷணி எனப் பெயர் வரக் காரணம்**

நயினா தீவிற்கு அண்மித்ததாக அனலைதீவு என்னும் ஓர் அழகிய தீவு உண்டு. அதன் தெற்குப் பகுதியில் புளியம் தீவு என்னும் சிறிய தீவு காணப்படுகிறது. அங்கு வரலாற்றுடன் கூடிய நாகதம்பிரான் ஆலயம் அமைந்துள்ளது.

அந்த ஆலயப் பகுதியில் இருந்து கடல் வழியாக நாக பாம்பு பூக்களைக் கொண்டு வந்து அம்பாளை வழிபாடு செய்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இவ்வாறு நாகம் வந்து பூசித்தமையால் நாகபூஷணி எனப் பெயர் வரக் காணமாயிற்று.

**பாம்பு சுற்றிய கல் கருடன் கல் வரலாறு**

ஆலய வரலாற்றுச் சின்னமாக இக்கற்கள் பாதுகாக்கப்படுகின்றன. அனலைதீவுப் பகுதியில் இருந்து நாகபாம்பு அம்மனுக்கு பூக் கொண்டு வந்த வேளை கருடன் அதை இடைமறித்ததாகவும் அப்போது நாக பாம்பு அருகில் இருந்த கல்லில் சுற்றிக் கொண்டதாகவும் அருகில் இருந்த மற்றைய கல்லில் கருடன் அமர்ந்து நாகபாம்பை மறித்ததாகவும் அவ்வேளை படகு மூலம் வியாபார நோக்கிற்காக வந்த வணிகச் செட்டியார் இக் காட்சிதனைக் கண்டு, அம்பாளை நோக்கு வழிபாடு செய்ததாகவும், பின்பு கருடன் அவ்விடத்தை விட்டு பறந்து சென்றதாகவும், நாகபாம்பு பூக் கொண்டு சென்றதாக வரலாறுகள் கூறுகின்றன.

இதன் காரணமாக பாம்பு சுற்றி இருந்த கல் பாம்பு சுற்றிய கல் எனவும், கருடன் இருந்த கல் கருடன் கல் என வும் அழைக்கப்படுவதோடு ஆலய பதினோராம் திருவிழா அன்று இக்கற்களுக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெறுகின்றன.

**அன்னையின் அருளாசி**

இவ்வாலயத்திற்கு நாட்டின் பல பாகங்களிலும் இருந்து பக்தர்கள் வந்து கூடுகின்ற தலமாகக் காணப்படுகின்றது. இவ்வாலயத்தில் தங்கி நின்று நாக தோச நிவர்த்தி, ஏனைய பரிகாரக்கிரியைகள் செய்து வருகிறார்கள். பௌர்ணமி தினங்களில் மாதாமாதம் ஸ்ரீசக்ர பூசை இங்கு சிறப்பாக நடைபெறுகிறது.

திருமணமான பெண்கள் தங்களது தாலிப் பாக்கியம்நிலைக்கவும் திருமணமாகாத பெண்கள் நல் திருமண வாழ்வு கிட்டவும் வழிபாடு செய்கின்றனர்.

எமது திருநாட்டிலும் உலகெங்கும் காணப்படும் கொடிய கொரோனா நீங்கிட எல்லாம் வல்ல மகா சக்தி நயினை நாக பூஷணித் தாயை மனமுருகிப் பிரார்த்திப்போமாக.

நயினை
விசு -இராசநாயகம்,
தாதிய உத்தியோகத்தர்,
பிரதேச வைத்தியசாலை,
நயினாதீவு.




## தேரடி தொழுதோம் அம்மா

தேரினில் பவனி வரும் தேவி உன் முகம் காண
தேடி வந்த விழிகளில் கண்ணீர் சொரிய
தேவர்கள் மூவர்கள் எல்லோரும் உன்னைத் தொழ
தேவி உன் திருவடி விழுந்து பணிந்து
தேவாரம் முதலிய பாமாலைகள் பாடிப்
பூமாலைகள் சாற்றி
தேவ லோகமோ என மனதில் நினைந்து
தேரடி தொழுது நாகபூஷணியின் பாதம்
பணிந்தோம்.

ம.லலிதாம்பிகை
நவாலியூர்.

## கொடிய வினைகளை அகற்றிடுவாயம்மா

அலைகள் தழுவும் நயினை நகரில்
உறையும் நாகபூஷணியே அம்மா
ஆதாரம் நீதானம்மா ஆறுதல் சொல்லம்மா
கொரோனாவால் உம் உள்வீதி
எழுபது பேராகியதேனம்மா
வெளிவீதி தானுமொரு ஆறு லட்சம்
கொள்ளுமம்மா
ஆனாலும் முந்நூறு பேராகிய பேரவலம் ஏனம்மா?
இந்த அவலத்தை ஓட விரட்டி
நயினைத்தாயே நாகம்மா
நல்லருள் புரியும் தாயம்மா

ச.லிகேசன்
நெடுந்தீவு.

## நல்லருள் புரிந்திடம்மா

எண் எண் சக்தி பீடங்களாம்
அதிலொன்றாம் நயினைத்
தாயின் புவனேஸ்வரி பீடம்
தன்னில் பதியிலுறை
ஒய்யார வடிவழகி ஆழி சூழ்
கடலரசி கருடபகவான் ஆணை
ஏற்று மகா பேராலயத்தை
மாநாயக்கன் துணையுடன்
அமைத்துக் கொண்ட
நயினையம்பதி தாயே
அன்புடன் எம்மை
அரவணைத்து நல்லருள்
புரிந்திடம்மா

எஸ். யு.சிவம்
வவுனியா

## தாவிலா அருள் தந்து காப்பாயம்மா

கடல் நடுவே காட்சி
தந்தெமைக் காலமெல்லாம்
காத்தருளும் நாகம்மையே
தொடரும் கொரோனா
வைரஸ் தொற்றால் மக்கள்
குடமாகக் கண்ணீர்
சொரிவதைப் பாருமம்மா
நடமாடும் மாந்தர்
நலிந்தொரு மூலையில்
முடங்கிக் கிடப்பது
முறையோ அம்மா
படகேறி வந்தும் பாராமுகம்
ஏனோ பார்த்துன் அருள்தரத்
தயங்குவ தேனோ தடம் பல
பதித்து தரணி தழைக்க தாவிலா
அருள்தந்து
காப்பாயம்மா!

கலாபூஷணம்
மு.தணிகாசலம்
கற்கோவளம்.

## ரதமேறும் நாகபூஷணியே

சிந்தை நிறை செல்வமும் சீலமுற பண்பும்
சீர்பெற்ற நயினையம் பதியுறை ஈஸ்வரியே!
சிந்தை கலங்கும் அடியவர்க்கு ஆறுதல்
தந்திடுவாய் நாக பரமேஸ்வரியே!
நாகமுடன் நாளும் நாவினிலே தாயுறைய
தேவியுடையாள் சந்நிதிக்கு வரமுடியாத்
துடிக்கின்றோம்
உன்னருளைத் தெளித்திடும்மா
நயினையம் பதிவாழ் மணிப்பல்லவ நாயகியே!

நயினைக் கதிர் மகிந்தன்
நயினை-07.

## எம் இனத்தை ஆள்பவள் நீ

சுற்றிவரும் சூரியன் நீ சுயமில்லா சந்திரன்
நான் உற்ற கோயில் தனிலிருந்து வரமளிக்கும்
தெய்வமன்றோ ஆழ்கடல் கடந்து வந்தோம்
அன்னை நீ பிள்ளை நான் ஏழ் உலகும்
ஆள்பவள் நீ இன்று ரதமேறி வருவாயே

புலவர் செ.பரமநாதன்
தாவடி.

## துயர் துடைப்பாய் அம்மா

கோயில்கள் பல அமைத்து
கோபுரங்கள் சேர்த்து அமைத்து
வாயில் தனைக் கழுவி
மாலையிட்டு தோத்தரித்தோம்
பூவில் உறைபவளே புனிதங்கள் சேர்ப்பவளே
எம் பாவில் மனம் உருகி பார் அமைதி
பெற்றிடவே
வல்லமையால் வென்றிட நாம்
வரம் அருளும் அம்மா ! அமுத சுரபி நாயகியே
அமுதம் எமக்கு தாரும் அம்மா!

சி.அபிநயா,சி.சுவேகா
வல்வெட்டித்துறை.

## நூபுரம் கையேந்தி நீதிகேட்டு

நயினையிலே குடியிருந்து நயம் அருளும்
நாயகியே உனைத்தினமும் இங்கிருந்தவாறு
நினைப்ப தல்லால் தாயேவேறு அறியேன்
நீயிருக்கு மிடம் வரவோ தடைகள் பல
நுணுக்கிவிடு அடியவரின் துயரம் எல்லாம்
நூபுரம் கையேந்தி நீதிகேட்டு நீயும்
நெகிழ விட்டு மதுரை நகர் எரித்தவாறு
பக்தர்கள் துயரனைத்தும் விலக்கிவிடு தாயே
நைமித்திய பூசைகளைக் கண்டு களித்திடவே
நொருக்கிவிடு தடைகள் யாவும் அன்பர்
நோன்பிருந்து வழிபடவும் அருள்வாய் தாயே நீ
நௌவி கண் ணுடையவளே எழுந்திடுவாய் அம்மா
இந்த அடியவர் குறையனைத்தும் தீர்த்துவிடு தாயே

மயூரதன்
யாழ்ப்பாணம்.



# நயினாதீவு நாகபூஷணி அம்ம


## Computer Science

I. B.Sc in Computer Science (Top Up 1 Year) Entry Qualification: 02 Years Dip.in IT/HND-IT
II. B.Sc in Computer Science (3 Years) Entry Qualification: G.C.E (O/L) / (A/L)
III. M.Sc in Computer Science (1 Year) Entry Qualification: Any Degree

## B.Sc in Agriculture Science

I. B.Sc in Agriculture Science (Top Up 1 Year) Entry Qualification: Dip.in Agriculture (02 Years)
II. B.Sc in Agriculture Science (3 Years) Entry Qualification: G.C.E (O/L) / (A/L)
III. M.Sc in Agriculture Science (1 Year) Entry Qualification: B.Sc in Agriculture Science

## Education

I. B.Ed. (Top-Up) 01 Year Entry Qualification: Teacher's Training College/College of Education
II. M.Ed. (01 Year) Entry Qualification: B.Ed./P.G.D.E
III. M.Ed. (03 Years) Entry Qualification: M.Ed

NORTH LANKA IIT
SUCCESS MAKES PERFECT

# NORTH L

## B.Sc in Civil Engi

I. B.Sc in Civil Engineering (Top-Up - 01 Year) En

## P.h.D

I. P.hD (3 Years) Entry Qualificatio

## Fine A

I. B.FA (Art & Design - 3Years) Entry Qualifica
II. B.FA (Top - up - 1Years) Entry Qualifica
III. M.FA (1 year) Entry Qualifica









Adiyapatham Road, Thirunelvely,
021 205 2288 / 077 932 6147
Sivakaamymahal@gmail.com
www.shivahamimahal.com





எமது சிவகாமி மஹால் மண்டபத்திற்கு உங்களை அன்புடன் வரவேற்கின்றோம். மிகச் சிறப்பான சேவையை வழங்கும் பொருட்டு நவீன வசதிகளுடன் கூடிய மண்டபம், உணவு வகைகள், சொகுசு ஒழுங்குபடுத்தல்கள், நட்புறவான ஊழியர்களுடன் எமது சேவையை யாழ்.மண்ணில் ஆரம்பித்திருக்கின்றோம். உங்களின் மங்கலகரமான நிகழ்வுகளை எம்முடன் இணைந்து மேலும் சிறப்பாக அமைத்துக்கொள்ள எம்மை நாடுங்கள்!








நடராசா கஜந்தன்

Since 1978

NJ

# நியூ மைதிலி





## ஜுவலர்

நயினையின் தேர்த்திருவிழா சிற
வாழ்த்துகின்றோம்

இல.38,40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel : 021 221 7878 Fax : 021 221 7877

# வலம்புரி கல்விப் பிரிவு வழங்கும்
## க.பொ.த.சா/தரப் பரீட்சை
## தமிழ்மொழியும் இலக்கியமும் மாதிரி வினாத்தாள்

பகுதி-I,II,III நேரம்: 3 மணித்தியாலம்

1. "தண்டாமரையுடன் பிறந்தும் தண்டேன் நுகரா மண்டுகம்" இதில் மண்டுகம் என்பதன் ஒத்த கருத்து.
   1. தவளை 2. வண்டு
   3. குளம் 4. தாமரை

2. "அற்றைத்திங்கள் அவ்வெண் நிலவில்" திங்கள் என்பது
   1. வாரம் 2. மாதம்
   3. சந்திரன் 4. நாள்

3. "இருமிடை மிடைந்த சில சொற் பெருமூதாளர்" இதில் மூதாளர் என்பதன் எதிர்ப்பதம்.
   1. மூதாளர் 2. சீதாளர்
   3. இளைஞர் 4. வயோதிபர்

4. "கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலோம்" இங்கு கதி என்பதன் எதிர்க்கருத்து.
   1. நிலை 2. துர்க்கதி
   3. அகதி 4. நிர்க்கதி

5. "புவனம் மூன்றும் நலஞ்செய்யும் நாடு" புவனம் என்பதில் அடங்காதது.
   1. மேல் உலகம் 2. பாதாள உலகம்
   3. கற்பனை உலகம் 4. பூலோகம்

6. உளுவரிசி என்பது எதனைக் குறிக்கும்.
   1. உழுந்து 2. வெந்தயம்
   3. கடுகு 4. ஆமணக்கு

7. டிமான்ட் (Demand) என்பது
   1. ஒளிப்பதிவு 2. படத்தொகுப்பு
   3. கேள்வி 4. விற்பனை

8. "வேய், அமை, வரை" என்பன குறிக்கும் ஒரு சொல்
   1. காடு 2. மலை
   3. கடல் 4. மூங்கில்

9. "குதிரையின் ஆண் குண்டு" என்பது போல பெண்
   1. வடவை 2. அலவன்
   3. பெடை 4. கயம்

10. கண்திறத்தல் என்ற மரபுத்தொடரின் பொருள்
   1. நித்திரை விட்டெழுதல் 2. அறிவு உண்டாதல்
   3. சிந்தித்தல 4. மகிழ்ச்சியடைதல்

11. முதுமைக்காலத் தேவைக்காக சேமித்து வைக்கப்படும் பொருள் எவ்வாறு அழைக்கப்படும்.
   1. எய்ப்பில் வைப்பு 2. சேமிப்பு
   3. ஓலக்கம் 4. நித்தகம்

12. "ஆசிரியரது கொள்கைகளை மாணவன் அடியொற்றினான்". இங்கு அடியொற்றினான் என்பதன் பொருள்
   1. பின்பற்றுதல் 2. தொடர்தல்
   3. கடைப்பிடித்தல் 4. கற்றான்

13. மன்னர்களால் செய்யப்படும் சிறப்பு
   1. நித்தகம் 2. ஓலக்கம்
   3. மாராயம் 4. ஓம்படை

14. இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது என்ற பழமொழியின் கருத்து.
   1. கண்ணை இமை பாதுகாக்கும்
   2. ஈகை குணத்தை வலியுறுத்துதல்
   3. தன் குற்றம் தனக்குத் தெரியாது.
   4. வறுமையிலும் செம்மை

15. "உழைத்துப் பொருள் தேடாது செலவு செய்தால் எந்தப் பெருஞ் செல்வமும் தாழ்ந்துபோகும்" என்ற கருத்தைத் தரும் பழமொழி.
   1. எறும்பூரக் கற்குழியும்
   2. குந்தித் தின்றால் குன்றும் மாளும்
   3. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்
   4. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

16. வீணாகிப் போதலைக் குறிப்பதற்குப் பொருத்தமற்ற உவமைத் தொடர்.
   1. அங்கணத்துள் உக்க அமிழ்தம் போல
   2. மீகாமன் இல்லா மரக்கலம் போல
   3. காட்டில் எறிந்த நிலாப் போல
   4. விழலுக்கு இறைத்த நீர் போல

17. "வேலைவெட்டி இல்லாமல் திரிகின்றான்" இங்கு இடம்பெற்ற வெட்டி என்ற சொல் இதே பொருளில் கையாளப் பெற்ற பிறிதொரு தொடர்.
   1. விறகு வெட்டி 2. பாக்கு வெட்டி
   3. வெட்டிப்பேச்சு 4. வெட்டி விழுத்து

18. எதிர்ப் பொருள் குறிக்கும் இரு சொற்கள் இணைந்து வரும் இணை மொழிக்கு உதாரணம்.
   1. ஆதியந்தம் 2. ஒட்டியுலர்ந்து
   3. கொஞ்சிக்குலாவி 4. கள்ளங்கபடம்

19. குறைகளை நீக்கி நல்லதை மட்டும் போற்றுதல் என்ற கருத்தினை தரும் அருஞ்சொற்றொடர்.
   1. அருணெறி போற்றாது மருணெறி போற்றி
   2. ஆசைகாட்டி மோசம் செய்து
   3. உள்ளொன்று வைத்து புறமொன்று பேசி
   4. குற்றம் களைந்து குணம் பாராட்டுதல்

20. "அவருக்குக் காணியைப் பற்றி அரை குறையாகத் தெரியும்". இதில் அரைகுறை என்பது.
   1. இரட்டைக்கிளவி 2. அடுக்குத்தொடர்
   3.இணைமொழி 4. அடுக்கிடுக்குத் தொடர்

21. பின்வருவனவற்றுள் பகாப்பதம்
   1. பொன்னன் 2. அவன்
   3. தீ 4. அற்று

22. வேற்றுநிலை மெய்மயக்கம் இடம் பெற்றுள்ள சொல்
   1. மன்னன் 2. பச்சை
   3. பாம்பு 4. பட்டம்

23. பின்வருவனவற்றுள் வினையடை.
   1. இனிமையாக 2. சிறிய
   3. உயரமான 4. இனிமையான

24. "மதில் மேல் பூனை" இது எத்தனையாம் வேற்றுமை.
   1. 2ம் வேற்றுமை 2. 5ம் வேற்றுமை
   3.7ம் வேற்றுமை 4. 4ம் வேற்றுமை

25. கெடுதல் விகாரப் புணர்ச்சி இடம்பெற்று அமைந்த சொல்.
   1. கடலலை 2. மட்பாண்டம்
   3.நீலவானம் 4. பழச்சாறு

26. நான் அவனை பேசவில்லை
   அவனது பேச்சில் நியாயம் இருந்தது.
   மேற்படி வாக்கியங்களை இணைக்கும் சொல் எது?
   1. ஏனெனில் 2. எனினும்
   3. ஆகவே 4. என்றாலும்

27. விழுந்தவனை இது எவ்வகை பெயர் சொல்
   1. மாற்றுப் பெயர்
   2. தொழிற் பெயர்
   3. இடுகுறிப் பெயர்
   4. வினையால் அணையும் பெயர்.

28. அகராதி ஒழுங்கில் அமையாத சொற் தொகுதி
   1. கறுப்பு, சுட்டி, பல்லி 2. சாடி, காகம், திறப்பு
   3. கூடு, சீப்பு, தம்பி 4. சவர்க்காரம், தண்ணீர், பட்டு

29. பொருத்தமான உதாரணம் இடம்பெற்ற சொற்தொகுதி
   1. ஆக்கப்பெயர் - பூக்காரி, மூலதனம்
   2. கூட்டுப்பெயர் - நீர்வீழ்ச்சி, படிப்பு
   3. காரணப்பெயர் - மண்வெட்டி, மரம்
   4. தொழிற்பெயர் - ஆடுதல், விழுந்தவன்

30. தன்வினை- எழுதினான், ஊட்டினான்
முற்றுவினை - வந்தான், படித்தான்
எச்சவினை - பறந்து, நடந்து
குறிப்பு வினை - கரியன் கண்டான்

● புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

31. மழையினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உர ................ வழங்கப்பட்டது.
1. நன்கொடை 2. மானியம்
3. சன்மானம் 4. வெகுமதி

32. கண்ட இடத்தில் கள்வனை பிடிக்குமாறு நீதிபதி ..................... பிறப்பித்தார்.
1. அழைப்பாணை 2. கட்டளை
3. பிடியாணை 4. உத்தரவு

33. அத்திய அவசிய பொருட்களின் விலை அதிகரிக்காது என நிதியமைச்சர்.................... அளித்தார்.
1. உத்தரவாதம் 2. விதப்புரை
3. பரிந்துரை 4. ஆணை

34. கல்விச் சீர்திருத்தம் தொடர்பாக பாடசாலைகளுக்கு ..................... அனுப்பி வைக்கப்பட்டது.
1. அறிவித்தல் 2. துண்டுப்பிரசுரம்
3. சுவரொட்டி 4. சுற்றுநிருபம்.

35. இராமன் சீதையுடனும், இலக்குமணனுடன் காட்டிற்கு.....................
1. சென்றான் 2. செல்வார்கள்
3. சென்றனர் 4. செல்கிறார்கள்.

36. நீ நன்றாக படித்தால் அன்றி பரீட்சையில் .....................
1. சித்தி அடைய வேண்டும் 2. சித்தி அடைய மாட்டாய்
3. சித்தியடைவாய் 4. சித்தி அடைந்தாய்

தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

இரவினில் உலகை மறைத்து வைத்திருந்த
இருளினை துரத்தியே பிடிப்பது போல
கிரணங்கள் என்னும் பல கரங்களை நீட்டி
கீழ்த்திசை நின்று மெல் மெல் என கிளம்பி
தடும் எரி திரள் என பனிப் பகையினைச் சாடி
திரு உரும் உலகினர் மகிழ்வுற வந்து
செங்கிரவன் உதயம் செய்கின்றானே.

37. இரவில் உலகை மறைத்து வைப்பது எது?
1. தாமிரத் தட்டம் 2. பனிப்படலம்
3. இருள் 4. சூரியன்

38.சூரியனது கரங்களாகவும் , பகையாகவும் உருவகிக்கப்படுவன முறையே
1. இருள், உலகு 2. கிரகணங்கள், பனி
3. எரிதிரள், பனி 4. இருள், கிரணங்கள்.

39. இப்பாடலின் கருத்துக்கு பொருந்தாத கூற்று.
1. உதய சூரியன் தாமிரத் தட்டம் போல தோற்றம் அளிக்கின்றது.
2. உதய சூரியன் நெருப்புத் திரள் போல தோற்றம் அளிக்கின்றது.
3. சூரியன் உலகத்து இருளை பிடித்து வைத்திருக்கின்றது.
4. சூரிய உதயத்தால் மக்கள் மகிழ்ச்சி அடைகின்றார்கள்.

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றி காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையை தெரிவு செய்க.

அ) மனித விழுமியங்கள் சேர்க்கப்படாத அறிவு பயனற்றது.
ஆ) அது அறிவியல் சார்ந்தது.
இ) அதாவது அறப்பண்புகளின் அடிப்படையில் எழுகின்ற மனித விழுமியங்கள் சார்ந்தவை.
ஈ) அறிவியல் என்பது அறிவு என்னும் நாணயத்தின் ஒருபக்கம் மட்டுமே
உ) அறவியல், அறிவியல் என்பன மனித வாழ்வின் இரு முக்கிய விடயங்களாகும்.
1. அ, இ, ஆ, உ, ஈ 2. உ, ஈ, ஆ, இ, அ
3. ஈ, ஆ, உ, இ, அ 4. உ, இ, ஆ, அ, ஈ

## பகுதி II

சுருக்கமான விடை எழுதுக.
1. சந்தி பிரித்தெழுதுக.
I. செழுந்தாதிறைக்கும்
II. "இஞ்சால வா மகன் மையத்த தூக்கப் போறாக"
அ. மேற்படி வாக்கியம் எப்பிரதேச வழக்கு.
ஆ. மையத்து என்பதன் பொருள்.

III. பின்வரும் வாக்கியத்தைப் பொருத்தமான நிறுத்தற்குறியீடு கொண்டு அமைக்குக.
அடகுரங்குக்குட்டி உனக்கு இதெல்லாம் எப்படியடா தெரியும்

IV. "ஸ்தூலம்" என்ற சொல்லின் கருத்து புலப்படுமாறு வாக்கியம் அமைக்குக.

V. "வரை" என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வருமாறு தனித்தனி வாக்கியங்கள் அமைக்குக.

VI. "குமார் இரண்டு குருவிகளை பிடித்தார்". செய்வினையை செயற்பாட்டு வினையாக்குக.

VII. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய், பயனிலைகளை குறிப்பிடுக.
"கூரையை பிய்த்து கொண்டு காற்று வேகமாக வீசியது"

VIII. தட்டிக்கொடுத்தல் என்ற மரபுத் தொடரின் பொருள்.

IX. மலைநாட்டில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது. இவ் வாக்கியத்தின் மயக்கத்தை நீக்குக.

X. கவிமணியின் பாடல்கள் எளிமை நிறைந்தவை.
கவிமணியின் பாடல்கள் இனிமை நிறைந்தவை.
● மேற்படி தனி வாக்கியங்களை கூட்டு வாக்கியங்களாக அமைக்க.

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக.

நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலையங்கம் இடுக.

I. இன்று எமது நாட்டில் பொலித்தீன் பாவனை அதிகரித்து வருகின்றது. இதனால் பல சுகாதார சீர்கேடுகள், சூழல் மாசடைதல் என்பன அதிகரித்து வருகிறது. ஆகவே பொலித்தீன் பொருட்களுக்கு பதிலாக மாற்றுப் பொருட்கள் பாவிப்பதால் ஏற்படும் நன்மைகளை விளக்கி விளக்கக் கட்டுரை ஒன்று வரைக.

II. கைபேசியின் நன்மை, தீமை தொடர்பாக இருவர்களுக்கிடையே நடைபெற்ற உரையாடல்.

III. இன்று எமது நாட்டில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகிறது. சமூகவிரோத செயல்கள் மற்றும் கலாசார சீர்கேடுகள் நடைபெறுகிறது. போதைப்பொருள் பற்றிய விழிப்புணர்வை ஊட்டும் வகையில் மாணவர் மத்தியில் நீர் ஆற்றிய மேடைப்பேச்சு.

IV. பிறேம் படிப்பிலும் பிற செயற்பாடுகளிலும் கெட்டிக்காரன்தான். எனினும் வீட்டில் அடங்காப்பிள்ளையாகவே நடந்து கொண்டான். தந்தையை மதிப்பதில்லை சுற்றத்துடனும் அப்படியே , படிப்புத்திறமை காரணமாக நல்ல தொழிலும் அதன்மூலம் நல்ல குடும்ப வாழ்க்கையும் கிடைத்தன. குழந்தைகள் பிறந்தன. இப்போது அவனது மகன் பிறேமைப் போலவே அடங்காப்பிள்ளை போல நடக்கத் தொடங்கினான். தந்தையின் நிலை இப்போது பிறேமுக்கு விளங்கியது. தான்விட்ட தவறுகளை உணர தொடங்கினான்.... இப்படிப்பினையை அடிப்படையாகக் கொண்ட ஒரு சிறுகதை.

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 - 45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக)

எந்த ஒரு கலையோ இலக்கியமோ உண்மையாகச் செழித்து வளர வேண்டுமாயின் அது பேரியக்கமொன்றின் அம்சமாக இருத்தல் அவசியம். நாட்டுப் பாடல் வளர்ச்சியும் இவ்விதிக்கு விலக்கன்று. உழைக்கும் மக்களின் இலக்கியம் நாட்டுப் பாடல்கள். பல்வேறு காலமாகச் சமூகத்திலே நசுக்கப்பட்டு வந்துள்ள அவர்களது ஆவேசமும், உரிமைக் குரலும் நாட்டுப் பாடல்களில் ஆங்காங்கு ஒலிப்பதுண்டு. இன்ப துன்பங்களைச் சித்தரிக்கும் பாடல்களின் அடிநாதமாக அவர்களது கண்ணோட்டம் அமைந்துள்ளது. அது நம்பிக்கையோடு எதிர்காலத்தை நோக்கும் கண்ணோட்டமாகும். அந்தக் கண்ணோட்டத்தை ஆதாரமாகக் கொண்டு எமது காலத்துச் சமூக இயக்கங்களில் நாட்டுப்பாடல் முதலியவற்றைக் கலந்தால் நிச்சயம் அவை புதிய வாழ்வு பெறும். ஆனால் அவ்வாறு செய்தால் அதன் "தூய்மை" கெட்டுவிடும் எனச் சிலர் பிரலாபிப்பர்.

எனினும் இன்று இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலே Folk song நாட்டுப்பாடல் இயக்கம் மிகவும் செழித்து வளரக் காண்கிறோம். முன்னெப்பொழுதுமில்லாத அளவு பாடல்கள் இயற்றப்படுகின்றன. கச்சேரிகளிலும் அரங்குகளில் கலைஞர்கள் புதியபுதிய நாட்டுப்பாடல்களைப் பாடி பல்லாயிரக்கணக்கான மக்களைப் பரவசத்தில் ஆழ்த்தி வருகின்றனர். அதன் இரகசியம் என்ன? வேறொன்றுமில்லை. அணு ஆயுத எதிர்ப்பு, சமாதானக் கோரிக்கை, அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு, பலவிதமான உரிமைப் போராட்டம் முதலிய இயக்கங்களில் ஈடுபட்டுழைக்கும் ஆயிரக்கணக்கான இளைஞரும், பிறரும் தமக்குப் பொழுதுபோக்காகவும், தமது கருத்துக்களைப் பிறருக்கு எடுத்துரைக்கும் முகமாகவும் நாடோடிப் பாடல் மெட்டுக்களில் புதிய உள்ளடக்கத்தைப் பெய்கின்றனர். அதிலே ஆத்ம திருப்பியடைகின்றனர்.

பழைய மெட்டுக்கள் ஏற்கனவே மக்கள் நெஞ்சில் நிலைத்திருப்பன வாகையால்,விரைவில் புதிய பாடல்கள் யாவராலும் பாடப் பெறுகின்றன. பழைய சாடியில் புதிய மது வார்க்கப்படுகின்றது. இரண்டும் சிறப்புப் பெறுகின்றன இதிலொன்றும்ஆச்சரியப்படுவதற்கில்லை.

4. பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

நாற்பது அல்லது ஐம்பது வருடங்கள் வாழ்ந்த மனிதனையும் நானூறு வருடமாக மறைய தெரியாமல் திண்டாகும் கருங்கல் மதிலையும் ஒன்றாக வைத்து இவன் நீர்மேற் குமிழியன் மறைந்து போனான். சுவரே நிலைத்து நிற்கிறது. இன்னும் குறைந்தது நானூறு வருடங்கள் நிற்கும். ஆகவே மனிதன் வாழவில்லை மதில்தான் வாழ்கிறது என்று யாராவது சொல் வார்களா? எவ்வளவு காலம் இருந்தோம் என்பதைக் கொண்டன்று எப்படி இருந்தோம் என்பதை கொண்டு வாழ்ந்தோமோ இல்லையா என்பதை நிர்ணயிக்க வேண்டியுள்ளது எவ்வளவு காலந்தான் நின்ற போதிலும் சுவரை வாழ்ந்ததாக நாம் கருதுவதில்லை. அது வாழவில்லை இருக்கிற மனிதனோ வாழ்கிறான்.அவனுள்ளே உணர்ச்சிகளும் கருத்துக்களும் எண்ணங்களும் ஊற்றெடுத்து பெருகி வெள்ளக் காடாய் மாறி விடுகின்றன.

I. இப்பந்தியில் கூறப்பட்டிருக்கும் பிரதான கருத்து யாது?
II. சுவர் வாழ்வதில்லை என்பதற்கு இங்கு கூறப்பட்ட காரணங்கள் எவை?
III.வெள்ளக்காடு என்பது எவ்வகை அணி விளக்குக.
IV. இப்பந்தியில் குறிப்பிடப்பட்ட மரபுத்தொடர் யாது? அதன் பொருளை எழுதுக.
V. பொருள் தருக.
சுவர் -
காடு -

5. புவி வெப்பமடைதல் என்பது உலகளாவிய ரீதியில் பாரிய பிரச்சினையாக உருவாகி உள்ளது. இதனை தடுத்தற் பொருட்டு மரங்கள் வெட்டப்படுவதால் புவிக்கு ஏற்படும் பாதிப்புக்களையும் மரம் நடுகையால் ஏற்படும் நன்மைகளையும் விளக்கி 100 சொற்களில் அமைந்த துண்டுப்பிரசுரம் ஒன்று எழுதுக.

(அல்லது)

6. எமது நாட்டில் இன்று குடிநீருக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் குடிநீரானது பொருளாதாரப் பண்டமாக மாறிவருகின்ற அபாய நிலை காணப்படுகின்றது. எனவே நன்னீரை மாசடையாது பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பத்திரிகை ஆசிரியருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

## பகுதி III

1.சுருக்கமான விடை தருக.

1. "ஆடிக்குடத்தடையு மாடும்போ தேதிரையும்".
அ. இதில் ஒப்பிடப்படும் இரண்டு பொருட்களும் எவை?
ஆ. இதில் இடம்பெற்ற அணி யாது?

2. "மேழி பெருகவேணும் தம்பிரானே
நாடு தழைக்கவேணும் தம்பிரானே"
அ. மேழி என்பதன் பொருள் யாது?
ஆ. இது எவ்வகையான நாட்டார் பாடல் ஆகும்?

3. "படரெலாம் படைத்தாளைப் பழிவளர்க்குஞ் செவிலி"
அ. இப்பாடலில் படரெலாம் படைத்தாளை எனகுறிப்பிடப்படுபவர் யார்?
ஆ. இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

4. "தேம்படுபனையின் திரள்பழத்தொருவிதை"
அ. இப்பாடலை பாடியவர் யார்?
ஆ. தேம்படுபனையின் ஒருவிதை யாருக்கு ஒப்பிடப்படுகிறது.

5. "நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்"
அ. பேதையரின் தொழில் ஒன்று தருக.
ஆ. நாரின்மை என்பதன் பொருள் யாது?

6. "தொடித்தலை விழுத்தண்டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சிலசொற்"
அ. இப்பாடலை பாடியவர் யார்?
ஆ. முதுமையாளரின் நிலை ஒன்று தருக.

7. உயிருடன் சென்ற ஒருமகள்
செயிருடன் வந்தவிச் சேயிழை.
1. உயிருடன் சென்ற ஒருமகள் யார்?
2. சேயிழை என்பதை பிரித்தெழுதுக.

8. "ஆழப்புதைந்த
தேயிலைச் செடியின்
அடியிற் புதைந்த
அப்பனின் சிதைமேல்
ஏழை மகனும்
ஏறி மதித்து"
1. இக்கவிதையை எழுதியவர் யார்?
2. மலையக மக்களின் நிலை இக்கவிதையில் எவ்வாறு எடுத்துக் காட்டப்படுகிறது?

9. "அற்றைத்திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையம் உடையேம் எம் குன்றும் பிறர்
கொள்ளார்."
1. அற்றைத் திங்கள் என்பதன் பொருள் யாது?
2. இப்பாடலில் குறிப்பிடப்படும் குன்றின் பெயர் யாது?

10. "உண்பதுவு முறங்குவது மூர்க்கதைகள் பேசுவதும்
பெண்கடொழி லாமென்றே பேசிடுவ ரொருசாரார்"
1. இப்பாடலில் இடம்பெற்ற இலக்கியம் எது?
2. இப்பாடலில் குறிப்பிட்டபடும் பெண்களின் தொழில்கள் யாவை?

2.பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

1.கற்றார் முன் கல்வி உரைத்தல் மிக இனிதே
மிக்காரைச் சேர்த்தல் மிகமாண முன் இனிதே
எட்டுணை யானும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது.
1. இப்பாடலில் இடம்பெற்ற நூல் எது?
2. பாடலில் குறிப்பிடப்படும் இரண்டு இனிய விடயங்களைத் தருக.

2. ஆடிக் குடத்தடையு மாடும்போ தேதிரையும்
மூடித் திறக்கின் முகங்காட்டும் - ஓடிமண்டை
பற்றிற் பரபரெனும் பாரிற்பிண் ணாக்குமுண்டாம்
உற்றிடுபாம் பெள்ளெனவே யோது.
1. இப்பாடலைப் பாடியவர் யார்?
2. "பிண்ணாக்கும் உண்டாம்" என்ற தொடரை விளக்குக.?

3. கூட்டிற் பசுங்கிளிபோற் கோதையரை யெப்பொழுதம்
வீட்டி லடைத்துவைக்கும் விரகிலருக் கியாதுரைப்போம்
பூட்டித் திறந்தெடுக்கும் பொருளாக் கருதினரோ
கேட்டோர் நகைப்பதுவுங் கேட்டிலரோ பைங்கிளியே
கிஞ்சுகவாய்ப் பைந்தொடியாற் கிளத்தாய் பசுங்கிளியே.
1. இப்பாடலைப் பாடியவர் யார்?
2.பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளைக் குறிப்பிடுக.

4. இன்றைக்கென்னவோ செவ்வத்தாள் பால் கறக்க விடவில்லை. பின்னங்கால்களை உதைத்துக் கொண்டு, தலையைச் சிலுப்பி மூத்தம்மாவைப் பார்த்து சீறிசீறி பிகு பண்ணிக்கொண்டிருந்தது. இந்த மூத்தம்மாவை நினைக்கையில் நெஞ்சில் உவகை நிறையும்.

சுருக்கம் விழுந்தாலும் என்ன மிடுக்காய் நடக்குறா.
1. மேற்படி சிறுகதையில் இவ்வாறு சிந்திப்பவர் யார்?
2. மூத்தம்மாவின் குணவியல்புகளைத் தருக?

5. அன்றிலிருந்து புகையிலைக் கன்றுக்கு பாத்தி கட்டுவது போல கணிப்பொறி தளத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியில் நானும், இன்னொரு பகுதியில் மனைவியும், மீதியில் அரவிந்தனுமாகப் பயிர் செய்தோம்.
1. இப்பகுதி இடம்பெற்ற சிறுகதை யாது?
2.உவமை அணி பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

3.நீதிப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு
1. நாலடியார் கூறும் நட்பு
2. வெற்றிவேட்கை கூறும் நீதிக்கருத்து என்பவற்றை விபரிக்குக?
(அல்லது)
கிருஸ்ண தூதுச் சருக்கத்தில்
1. அத்தினாபுரத்தின் சிறப்புக்கள்
2. கிருஸ்ணரின் பெருமைகள் என்பவற்றை விபரிக்குக.

4.மூத்தம்மா என்ன சிறுகதையில்
1. கிராமிய வாழ்வியல் அம்சங்கள்
2. மூத்தம்மாவின் குணவியல்புகள் என்பன வெளிப்படுமாற்றை விளக்குக.
(அல்லது)
பாரதியாரின் சுயசரிதையில்
1. பிள்ளைக்காதல் வெளிப்படும் விதம்
2. விரும்பியவற்றை அடையாமைக்கான காரணங்கள்

5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவதொன்றுக்கு விடைதருக.

5.எது நல்ல சினிமா? என்ற கட்டுரையில்
1. படத்தொகுப்பு
2. காட்சிப்படிமம் என்பன தொடர்பான ஆசிரியரின் கருத்தை விளக்குக.

6. அற்றைத் திங்கள் என்ற பாடப்பகுதியில்
1. பாரிமகளிரின் துயரம் 2. பறம்பு மலையின்சிறப்புக்கள் என்பன வெளிப் படுமாற்றை விளக்குக?

7. நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில்
1. நாவலரின் வேகமும் விவேகமும் 2.கூட்டமும் வாதப் பிரதிவாதங்களும் பற்றி விபரிக்குக?

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்

(நேற்றைய தொடர்ச்சி...)

4. (i)"சரசவிய" என்ற நூலகமானது மாணவர்களுக்கான நூல்களை இரவல் வழங்கி வருகின்றது. இது கைமுறையை பயன்படுத்துவதில் பல இடர்பாடுகளை எதிர் நோக்குகின்றது. இந்நூலக முகாமைத்துவமானது இம்முறைமையை கணினி மயப்படுத்துவதன் மூலம் வினைத்திறனான சேவையை வழங்கமுடியும் என எதிர்பார்க்கின்றது.

1.இந்நூலக முறைமையை கணினிமயப்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளும் 2 அனுகூலங்களை குறிப்பிடுக?

2.இந்நூலகத்தின் தேவையை இனங்காண்பதற்கு பயன்படுத்தக்கூடிய தரவு சேகரிப்பு முறைகள் 3 தருக?

3.முறைமையிலுள்ள தவறுகளை நீக்குவதற்கு பயன்படுத்தக்கூடிய சோதித்தல் முறைகள் 4 ஐ குறிப்பிடுக?

4.நூலக முகாமைத்துவமானது நிதி தொடர்பான செயற்பாடுகளையும் இந்த முறைமையிலேயே கையாள்வதற்கு தீர்மானித்துள்ளது. ஆயினும் நிதி தொடர்பான தேவைகள் நன்கு வரையறுக்கப்படவில்லை.

I. இம் முறைமையை விருத்தி செய்வதற்கு நீர்வீழ்ச்சி மாதிரியத்தை பயன்படுத்தலாமா?

II. காரணம் தருக?

(ii) தரப்பட்டுள்ள பதங்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புக.

நிலைத்த இணையத்தளம், இயங்குநிலை இணையத்தளம், Joomla, Kompozer

1. உள்ளடக்க முகாமைத்துவ முறைமைக்கு .............. உதாரணமாகும்.
2. இணையப்படைப்பாக்க கருவிக்கு..............உதாரணமாகும்.
3. ..............இணையத்தளம் ஒன்றின் உள்ளடக்கமானது மாற்றமடையாது குறித்த காலத்திற்கு பேணப்படும்.
4. .............. இணையத்தளத்தின் உள்ளடக்கமானது மாற்றமடையும்.

(iii) முகில் கணினி எண்ணக்கருவின் அனுகூலம், பிரதிகூலம் என்பவற்றைக் குறிப்பிடுக?

5. (i) 1தொடக்கம் 8 வரை இலக்கமிடப்பட்டுள்ள பின்வரும் கூற்றுகளைக் கருதுக.

1. இலக்கமுறை இடைவெளியை நீக்கி மனிதர்களிடையே ஏற்படுத்தும் தொடர்பு.
2. சமூக வலைத்தளங்களை தவறான விதத்தில் பயன்படுத்துவதனால் சமூகத்திற்கு ஏற்படும் கேடு.
3. தனியாக தொழிற்பட்டு பரவும் ஆற்றலை கொண்டிருப்பதுடன் கணினி அடிப்படைச் சமூக உத்திகள் பயன்படுத்தப்படுகின்ற தீங்கு பயக்கும்.
4. தீங்கற்றது போன்று தோன்றுகின்ற போதிலும் தீங்குபயக்கும் மென் பொருள்.
5. கணினி நச்சுநிரல் போன்று தீங்கு பயக்காத போதிலும் பயனர் உளவியல் ரீதியில் தொந்தரவுக்கு உட்படுகின்றனர்.
6. வர்த்தக பிரசார பணிகளுக்காக அமைக்கப்பட்டது. பயனர் இணையத்துடன் தொடர்புபடும்போது அவருக்கு அதற்கு வழிவிடாமல் வேறு வலைப்பக்கத்திற்கு அது வழிப்படுத்தும்.
7. பயனரை ஏமாற்றி அவரின் வங்கிக்கணக்கு பற்றிய தகவல்களை பெறல்.
8. அனுமதியின்றி கிடைக்கும் மின்னஞ்சல்.


மேற்குறித்த 1-8 வரையான கூற்றுகள் ஒவ்வொன்றுக்கும் பொருந்தும் பதங்களை கீழேயுள்ள பட்டியலிலிருந்து தெரிவு செய்து உரிய எண்ணுக்கு எதிரே எழுதுக.

விரும்பா அஞ்சல் **(Spam)**. இணைக்குற்றம் **(Cyber crime)**. இலக்கமுறைப் பாலம் **(Digital brigde)**. கணினி வோம்கள்**(Computer worms)**. பிஷிங் **(Phishing)**, ஒற்றர்பொருள்**(Spyware)** அநாவசிய விளம்பரங்கள் **(Adware)**. கொள்ளைக்காரர்கள் **(Hijacker)**

(ii) தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய சுகாதாரப் பிரச்சினைகள் 5 தருகு?


(iii) கணினியை பயன்படுத்தும் சரியான கொண்ணிலைகள் 5 தருக?

6. (i) ஒரு எண்ணை வாசித்து இது நேர் எண்ணா? அல்லது மறை எண்ணா ?எனக் காண்பதற்குரிய பாய்ச்சற்கோட்டு படம் தரப்பட்டுள்ளது.




மேலே தரப்பட்டுள்ள பாய்ச்சற்கோட்டு படத்திலுள்ள நெறிமுறைக்கான போலிக் குறிமுறையை எழுதுக.

(ii) ஒரு தொகுதி நேர் எண்களை உள்ளீடாக வழங்கி அவற்றின் கூட்டுத் தொகையை காண்பதற்கான பாய்ச்சற் கோட்டு படம் தரப்பட்டுள்ளது. இங்கு மறைப் பெறுமானம் ஒன்றை அல்லது பூச்சியத்தை உள்ளீடாக வழங்கும் போது எண்ணை உள்ளீடு செய்தல் நிறுத்தப்பட வேண்டும். இங்கு A தொடக்கம் E வரையான முகப்படையாளங்களுக்கு பொருத்தமான பதங்களை தரப்பட்ட பட்டியலிலிருந்து தெரிவு செய்து முகப்படையாளங்களுக்கு எதிரே எழுதுக. (பட்டியல் - n>=0,இல்லை, total ஐ காட்சிப்படுத்துக., ஆம், n> n>0)




# தரம்-5 புலமைப்பரிசில் வினாப்பத்திரத்திற்கான 01.07.2020 இற்கான பகுதி -02 விடைகள்

01) 1) ஆகாயம் 2) கடலை
3) மீன்களை 4) மீன்களை
5) நட்சத்திரங்கள் 6) பரவுகின்றன.

02) 1) ( × ) 2) ( ✓ ) 3) ( × )

03) 1) அறிவுண்டாதல் 2) பிற்போடுதல் / காலந்தாழ்த்துதல்

04) 1) இலங்கை மத்திய வங்கி.
2) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.

05) 1) நெல்வயல் 2) பற்பொடி

06) 1) வீராங்கனை 2) கனமாக 3) உரை

07) 1) அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.
2) மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

08) 1) பட்டிமன்றம் 2) பன்னசாலை

09) 1) நாங்கள் வருகின்றோம் / நாங்கள் வருகிறோம்
2) மழை பெய்கின்றது / மழை பெய்கிறது.

10) 1) அரசி அரண்மனைக்குச் சென்றாள்.
2) அவள் மாமா வீட்டிற்குச் சென்றாள்.

11) 1) வகுப்பறை 2) கண்கள்

12) 1) How are you? 2) Principal

13) 1) கரும்பலகை 2) மாமரம்

14) 1) குருவரயா 2) பொ(த்)த

15) 6521 16) 1316 17) XIV

18) 6175, 4507, 2325, 1576 19) 1) 80 2) 84

20) 12 21) 15 22) 15:00 23) 1) 6 2) 8

24) 22km 400m 25) 516 26) 1) 3/10
2) 2

27) 625.00 ரூபாய் 28) *6l 25ml* 29) 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30) | 1 | 40) | 1 | 50) | 1 |
| 31) | 2 | 41) | 3 | 51) | 2 |
| 32) | 2 | 42) | 2 | 52) | 3 |
| 33) | 3 | 43) | 1 | 53) | 3 |
| 34) | 1 | 44) | 1 | 54) | 3 |
| 35) | 1 | 45) | 3 | 55) | 2 |
| 36) | 3 | 46) | 3 | 56) | 2 |
| 37) | 2 | 47) | 2 | 57) | 1 |
| 38) | 3 | 48) | 1 | 58) | 1 |
| 39) | 3 | 49) | 2 | 59) | 2 |

# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை 02.07.202 பகுதி-1 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 3 | 11) | 1 | 21) | 2 | 31) | 1 |
| 2) | 2 | 12) | 3 | 22) | 3 | 32) | 1 |
| 3) | 1 | 13) | 1 | 23) | 2 | 33) | 2 |
| 4) | 2 | 14) | 3 | 24) | 2 | 34) | 3 |
| 5) | 2 | 15) | 2 | 25) | 2 | 35) | 3 |
| 6) | 1 | 16) | 3 | 26) | 1 | 36) | 2 |
| 7) | 3 | 17) | 3 | 27) | 3 | 37) | 1 |
| 8) | 2 | 18) | 2 | 28) | 1 | 38) | 3 |
| 9) | 3 | 19) | 2 | 29) | 3 | 39) | 3 |
| 10) | 2 | 20) | 2 | 30) | 2 | 40) | 2 |

# மன் இரதோற்ஷவ சிறப்பு மலர்


## LANKA IIT

**Arts**

I. BA - Medium - Tamil (3-Years) Entry Qualification: A/L
II. B.A in English (Top - up - 1Years) Entry Qualification:2 years Diploma
III. M.A (1 year) Entry Qualification: B.A

**Civil Engineering**

ear) Entry Qualification: Dip.in.Civil Engineering (02 Years)

**Sports Science**

I. B.Sc in Sports Science Top - up (1Years) Entry Qualification: Dip.in physical Education (2years)
II. B.Sc in Sports Science (3Years) Entry Qualification: G.C.E (O/L) / (A/L)

**P.h.D**

ualification: Any Master Degree

**Fine Arts**

y Qualification: (G.C.E (O/L) / (A/L)
y Qualification:Teacher's Training College/College of Education
y Qualification: B.FA (Art & Design)



North Lanka IIT
Top Floor, People's Bank Building,
Stanley Road Jaffna
T.P. 0767504535/ 0214927088



அழகிய தங்க நகைகளுக்கு நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்! தங்கமான உறவு இப்பொழுது புதிய பொலிவுடன்
நியூ உதயா ஜுவல்லர்ஸ்

No: 91, Power House Road,
Jaffna
Tel: 021 222 2031
newuthyajewellers@gmail.com

நியூ உதயா ஜுவல்லர்ஸ்

NEW Uthayaa JEWELLERS

இல.91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 021 222 2031

லி
லர்ஸ்
விழா சிறப்புற
ராம்



காலத்தை வெல்லும் கலை நுட்பத்துடன் மின்னும் பொன்நகையால் மேலும் உங்கள் புன்னகை ஒளிரும் விரையுங்கள் நியூ மைதிலிக்கு



ஒரிஜினல் தங்க நகைகளை பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

newmaithily40@gmail.com
newmaithily Jewellers
0094 21 221 7878



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

13

## கலாநிதி முருகர் குணசிங்கம்

அவர்கள் தங்குவதற்காகப் பல அறைகளைக் கொண்ட பாரிய மடங்களையும் ஆறுமுக நாவலர் காட்டி இருந்தார். இச்சமய மடங்கள் இன்றுவரையிலும் பாவனையில் இருந்து வருகின்றன.

மேலும் நாவலர் பாலர் பாடப் புத்தகங்களையும் பழைமையான சைவ, தமிழ் சார்ந்த ஓலைச் சுவடிகளையும் அழிந்து போகும் நிலையில் இருந்த நூல்களையும் அச்சிட்டு வெளியிடும் திட்டத்தை மேற்கொண்டார்.

இதன் பொருட்டு சென்னையில் ஒரு அச்சுக்கூடத்தை நிறுவினார். பல வகையான சைவ, தமிழ் நூல்களை அச்சில் பதிப்பித்தார். அந்த அச்சுக்கூடம் இன்றைக்கும் சிதைந்த நிலையில் சென்னை நகரில் இருக்கின்றது.

பல சைவத் தமிழ் அறிஞர்கள் நாவலரோடு தமிழ் நாட்டுக்கு வந்து அவருக்கு உறுதுணையாக இருந்தனர். இவர்களுள் பெரும்பான்மையானோர் நாவலர் போல் ஈழத்திற்குத் திரும்பிச் செல்லாமல் தமிழ்நாட்டிலேயே நிரந்தரமாகத் தங்கி இருந்து தமது பணிகளைத் தொடர்ந்தார்கள். பலர் தமிழ் நாட்டுப் பல்லைக்கழகங்களில் மேற் கல்வியைத் தொடர்ந்தார்கள்.

ஈழத்தமிழர்களின் அடுத்த புலம்பெயர்வு 1948 இல் இலங்கை விடுதலைக்குப் பின்னர் தொடங்கியது. இதுவரை மேலே குறிப்பிட்ட நிகழ்வுகளில் போர்த்துக்கீசர் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த அனர்த்தங்கள் ஈழத்தமிழர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றின.

ஏனையவை தன்னிச்சையான புலப்பெயர்வாகவே அமைந்தன எனக் கொள்ளலாம். ஆனால் 1948 ஆம் ஆண்டுகளில் இருந்து இன்றுவரை இலங்கையில் இருந்து தமிழர்கள் இந்தியாவுக்குள் வந்தமை. முழுக்கமுழுக்க அம் மண்ணில் இருந்து விரட்டப்பட்ட ஒரு புலப்பெயர்வாக அமைந்துள்ளது.

ஏற்கனவே முதலாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டதுபோல இலங்கையின் முதல் பிரதமரான டி.எஸ்.சேனநாயக்காவினது அரசு மலையகத் தோட்டங்களில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பகால கட்டங்களில் இருந்து பணிபுரிந்து வந்த இலட்சக்கணக்கான தமிழ்நாட்டுத் தமிழர்களுக்குப் பிரித்தானிய அரசினால் வழங்கப்பட்ட நிரந்தரக் குடி உரிமைகளையும் வாக்கு உரிமையும் சட்டங்களின் மூலம் 1949 களில் பறித்து எடுத்தார்கள்.

அதன் விளைவாக இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பல இலட்சக்கணக்கான மலையகத் தமிழர்கள் இலங்கையைவிட்டு வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார்கள்.

அவர்கள் எவ்வாறு கொடூரமாக நாடு கடத்தப்பட்டார்கள் என்பதை இந்நூலாசிரியரின் **"இலங்கையில் தமிழர்: ஒரு முழுமையான வரலாறு"** என்னும் ஆய்வு நூலில் விபரமாகப் புள்ளி விபரங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளதால் அதுபற்றிய விபரங்கள் தவிர்க்கப்படுகின்றன.

அக்காலகட்டத்தில் தமிழ் அரசியல் கட்சிகளின் கடும் எதிர்ப்புக் காரணமாக பல இலட்சம் மலையகத் தமிழர்கள் தாம் குடியேறிய மலையகத்திலேயே தங்கவும் முடிந்தது.


ஆனால் இந்நிகழ்வுக்குப் பின்னைய கால அரசியல் மாற்றத்தின் விளைவாக மலையகத்தில் எஞ்சியிருந்த தமிழர்கள் தமது குடியுரிமை, வாக்கு உரிமை என்பனவற்றை மீண்டும் பெற்றுக்கொண்டார்கள்.

வலுக்கட்டாயமாக அனுப்பப்பட்ட மலையகத் தமிழர் தமிழ் நாட்டில் எங்கு எவ்வாறு மீள்குடியமர்த்தப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டு உள்ளார்கள் என்பது பற்றிய ஆய்வு இன்றைய வரலாற்று மாணவர்களின் முக்கிய பணியாகப் பரந்து விரிந்து கிடக்கின்றது.

மலையகத் தமிழர்களின் புலப் பெயர்வு ஒரு கொடூரமான துன்பியல் நிகழ்வாகவும் இலங்கை வரலாற்றில் ஒரு கறை படிந்த காலப்பகுதியாகவும் வரலாற்று ஆசிரியர்களால் பார்க்கப்படுகின்றது.



ஜே.ஆர்.ஜெயவர்த்தன



எம்.ஜி.இராமச்சந்திரன்

மேற்கூறப்பட்ட பாரிய புலப்பெயர்வுக்குப் பின்னர் 1956, 1958 காலப்பகுதிகளில் இலங்கையின் சிங்கள அரசும் சிங்களக் காடையர்களும் ஈழத் தமிழர்கள் மேல் கட்டவிழ்த்து விட்ட இன அழிப்பு நடவடிக்கையின் விளைவாக பல படித்த ஈழத்தமிழர்கள் இந்தியாவுக்கும் ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளுக்கும் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் தனிப்பட்ட முறையில் சென்று நிரந்தரமாக தங்கிக் கொண்டனர்.

இக்காலகட்டத்தில் தமிழ் நாட்டிலும் இந்தியாவிலும் வந்து நிரந்தரமாக வாழ்ந்த தமிழர்கள் பற்றிய விபரங்களைச் சேகரிப்பதில் பல சிரமங்கள் இருக்கின்றன.

எடுத்துக்காட்டாக மேற்படி காலகட்டத்தில் இவ்வாறு ஈழத்தில் இருந்து இந்தியா வந்து நிரந்தரமாகத் தங்கிய முக்கியமாகப் படித்த மேல்தட்டு வர்க்கத்தில் ஒரு சிலரை இங்கு குறிப்பிடுவது தேவையாகின்றது.

பிரபல்யமான ஹென்ஸ்மன்(**Hensman**) குடும்பத்தைச் சேர்ந்த டாக்டர் எச்.எஸ். ஹென்ஸ்மன் என்பவர் ஓர் ஈழத்தமிழர். இந்தியாவுக்கு வந்து ஒரு பிரபல்யமான வைத்தியசாலையில் உயர் பதவி வகித்தவர்.

அவர் குடும்பம் நிரந்தரமாகவே இந்தியாவில் தங்கி இருக்கின்றது. அதே குடும்பத்தைச் சேர்ந்த பிரபல்யமான முற்போக்கு எழுத்தாளர் றோகினி ஹென்ஸ்மன் என்பவரும் நிரந்தரமாக இந்தியாவில் தங்கியுள்ளார்.

மேலும் 1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் அமோக வெற்றி பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவினது அதி தீவிர பௌத்த சிங்களவாதப் போக்கும் அரசியல் யாப்பு மாற்றமும் சிறுபான்மைத் தமிழருக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் ஈழத்தமிழர்களை மிக மோசமான நிலைக்குத் தள்ளியமை பற்றியும் அதனைத் தொடர்ந்து 1977 இல் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் அரசத் தலைவரான மிகவும் கடும்போக்காளரான பௌத்த சிங்களத் தேசியவாதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் தமிழர்களின் அரசியல் உரிமைகளைப் பற்றித்தெடுப்பதில் மிகமிக மூர்க்கத்தனமாக நடந்து கொண்டார்.

இதன் விளைவாக ஈழத்தமிழர் வாழ்விலும் அரசியலிலும் பெரும் மாற்றம் ஏற்பட்டது. அதிதீவிர சிங்கள பௌத்தத் தேசியவாதத்திற்கும் ஆயுத பலத்தில் நம்பிக்கை கொண்ட பெரும்பான்மை படைபலத்தைக் கொண்ட சிங்கள அரசுக்கு எதிராகவும் போராட வேண்டிய நிலைக்குத் தமிழர்கள் தள்ளப்பட்டனர்.

இதன் விளைவாக 1956, 1958 ஆம் ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிராகச் சிங்கள அரசினால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக்கலவரம் மீண்டும் 1977 இல் இடம்பெற்றது.

இதன் தொடர்ச்சியாகத் தமிழ் இளைஞர்கள், இந்தியாவில் இருந்தும் தமிழ் நாட்டில் இருந்தும் சிறிய உதவிகளைப் பெறத் தொடங்கினர். ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தமிழ் நாட்டில் தமது கால்களைப் பதித்தனர்.

1977 இனக் கலவரத்தைத் தொடர்ந்து 1979 இலும் தமிழருக்கு எதிரான இனக்கலவரம் சிங்கள அரசினால் திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டுப் பாரிய அழிவுகளைத் தமிழர் தரப்பில் ஏற்படுத்தியது.

இந்திராகாந்தி தலைமையிலான இந்திய அரசும் எம்.ஜி.இராமச்சந்திரன் தலைமையிலான தமிழ்நாடு மாநில அரசும் தமிழ் இளைஞர்களையும் தமிழ் மக்களையும் பாரிய அளவில் அகதிகளாகத் தமிழ்நாடு வர அனுமதித்தன.

எந்த ஓர் ஈழத் தமிழரும் அகதியாக இந்தியாவுக்கு உள்ளே வருவதற்கு இந்திய அரசு தடை விதிக்கவில்லை. வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்தது. அதுமட்டும் இல்லாமல் ஈழ விடுதலைப் போராளிகள் இந்திய மண்ணில் சுதந்திரமாக உலாவிடவும் அவர்களது அனைத்துச் செயற்பாடுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் வழங்கியது.

இந்நூலாசிரியர் நேரில் சென்று பல ஈழத்தமிழ் அகதிகளைச் சந்தித்தபோது தாங்கள் இலங்கையில் பட்ட அவலங்களையும் கொடூரமான நிகழ்வுகளையும் கண்ணீர் விட்டுக் கதறி அழுது கூறினார்கள்.

தமிழ்நாட்டில் அவர்களைத் தங்க வைத்து இருந்த குடிசைகளில் அடிப்படை வசதிகள் குறைவாக இருந்தபோதிலும் எந்தவித அச்சமும் இன்றி நிம்மதியாகத் தூங்க முடிந்ததாகக் கூறினார்கள்.

1977 இல் இருந்து 1987 இல் இந்திய - இலங்கை அமைதி உடன்படிக்கை **(India-Sri Lanka Peace Accoerd)** கைச்சாத்திடும் வரை சுமார் 1,35,000 ஈழத்தமிழ் அகதிகள் தமிழ்நாடு வந்ததாகப் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. 1990களில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசப் படைகளுக்கும் இடையில் இரண்டாவது ஈழப்போர் இடம்பெற்றது.

இதன்போது மேலும் சுமார் 1,25,000 தமிழ் அகதிகள் தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்தனர். 1995 இல் இடம்பெற்ற மூன்றாவது கட்ட ஈழப்போரைத் தொடர்ந்து சுமார் 22,000 அகதிகள் தமிழ் நாட்டை வந்தடைந்தனர்.

தொடர்ந்து நான்காவது ஈழப்போர் தொடங்கிய 2006 ஆம் ஆண்டு காலப் பகுதியில் மேலும் சுமார் 25,000 அகதிகள் தமிழ்நாட்டுக்கு வந்து சேர்ந்தனர்.

இறுதியாக 2009 மே மாதத்தில் ஈழ விடுதலைப் போராட்டம் முடிவிற்கு வந்ததாக இலங்கை அரசாங்கம் அறிவித்த பின்னரும் பல நூற்றுக்கணக்கானவர்கள் தொடர்ந்தும் அகதிகளாகத் தமிழ்நாட்டுக்கு வந்துகொண்டு இருக்கின்றார்கள்.

(தொடரும்)

# உள்ளூராட்சி சபைகளின் பரிணாமம்

05

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர் – எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற நிர்வாகப் பிரதேசங்கள்

கிராமிய செயற்குழுக்கள் யாவும் உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதோடு, உள்ளூராட்சி மன்ற உதவி ஆணையாளர்களின் மேற்பார்வையின் கீழும் கொண்டு வரப்பட்டன.

1947 ஆம் ஆண்டில் கிராம சபைகளால் செயற்படுத்தப்பட்ட "மெய் வரி" இல்லாதொழிக்கப்பட்டதுடன், அதற்குப் பதிலாக அதற்குரிய நிதி மத்திய அரசாங்கத்தினால் கிராமிய செயற்குழுக்களுக்கு வழங்கப்பட்டது.

1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்த போது உள்ளூர் அதிகார சபைகளாக மாநகர சபைகள், நகர சபைகள், பட்டின சபைகள் (Town Councils) மற்றும் கிராம செயற்குழு சபைகள் (Village Communities) ஆகியவை இருந்தன.

### 1952ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்ளூர் அதிகாரசபைகளின் அதிகாரங்களை விரிவுபடுத்துதல் சட்டம் (The Local Authorities Enlargement of Powers Act No. 8 of 1952)

மத்திய அரசிடமிருந்து சில அதிகாரங்களை உள்ளூர் அதிகார சபைகளுக்கு மாற்றியதுடன், நகர சபைகளுக்கும் புதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டன.

> **1952ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் அதிகாரங்களை விரிவுபடுத்துதல் சட்டம் நிறைவேற்றப்பட்டமை நான்கு வகையான உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கூடுதலாக அதிகாரங்களை வழங்கும் பிரதான உள்ளூராட்சி சீரமைப்பாகும்.**

உள்ளூராட்சி மன்றங்களை பரந்தளவிலான அதிகாரங்களுடன் வினைப்பயன் கொண்டு தொழிற்படுத்துவதற்கான பல முக்கியமான சட்டங்கள் சுதந்திரத்திற்கு பின்னரான காலப்பகுதியில் நிறைவேற்றப்பட்டன. 1952 ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகளின் அதிகாரங்களை விரிவுபடுத்துதல் சட்டம் நிறைவேற்றப்பட்டமை நான்கு வகையான உள்ளூராட்சி மன்றங்களுக்கும் கூடுதலாக அதிகாரங்களை வழங்கும் பிரதான உள்ளூராட்சி சீரமைப்பாகும்.

இது மத்திய அரசாங்கத்திலிருந்து உள்ளூராட்சி மன்றங்களை கட்டுப்படுத்தும் அமைச்சர்கள் பெற்றிருந்த அதிகாரங்களைக் குறைத்தது. இதற்கு முன்னர் குறிப்பிட்டவாறு உள்ளூராட்சி தொடர்பான நான்கு முக்கியமான கட்டளைச் சட்டங்களும் பல தடவை திருத்தியமைக்கப்பட்டன. 1948-1980 காலப் பகுதியில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் 40 தடவைகளும், நகர சபைக் கட்டளைச் சட்டம் 44 தடவைகளும், பட்டின சபைக் கட்டளைச் சட்டம் 23 தடவைகளும் மற்றும் கிராம செயற்குழு சபைகள் (கிராமச் சபைகள்) கட்டளைச் சட்டத்தில் 49 தடவைகளும் திருத்தங்கள் செய்யப்பட்டிருந்தன. இவ்வுள்ளூர் ஜனநாயக நிறுவனங்கள் பயனளிக்கும் வகையில் தொழிற்படுவதற்கான அதிகாரங்கள் கூடுதலாக வழங்குவதே இத் திருத்தங்களின் நோக்கமாகவிருந்தன.

1971ஆம் ஆண்டின் 59ஆம் இலக்கச் சட்டம் உள்ளூராட்சி வருமானங்களை அறவிடும் அதிகாரத்தை ஊதியம் பெறும் அலுவலருக்கு வழங்கியது. சபைகளின் வருடாந்த வரவு-செலவுத் திட்டங்களிற்கும் செலவின மதிப்பீடுகளுக்கும் சபைகள் அனுமதி கொடுக்காத சந்தர்ப்பங்களில் அனுமதி வழங்கும் அதிகாரத்தை சபைத் தலைவர்களுக்கு 1977ஆம் ஆண்டின் 24ஆம் இலக்கச் சட்டம் வழங்கியது.

இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களின் வரலாற்றில் காலம் சென்ற பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க உள்ளூராட்சி அமைச்சராக பணியாற்றிய காலத்திலேயே உள்ளூராட்சி மன்றங்கள் மறுமலர்ச்சி அடைந்தன. இது ஓர் வரலாற்று நிகழ்வாகும்.

பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகள் ஆகியவற்றின் செயலாற்றுகையை பரிசீலிப்பதற்காகவும் அவை நிறுவனங்களாக்குவதற்கான வரையறுப்புக்களைப் பிரேரிப்பதற்காகவும் 1978இல் அமைச்சரவை ஒரு குழுவை நியமித்தமை உள்ளூராட்சி மறுசீரமைப்பின் முக்கிய நிகழ்வொன்றாகும். ஜி. மொறகொடவின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழு, 83 பட்டின சபைகள் மற்றும் 549 கிராம சபைகள் ஆகியவற்றிற்குப் பதிலாக உப அரசாங்க பிரிவு அடிப்படையில் 269 கிராமிய சபைகளை நிறுவும் படி சிபாரிசு செய்ததெனினும் இம் முன்மொழிவு அமுல்படுத்தப்படவில்லை.

### 1978இல் உருவாக்கப்பட்ட பிரதேச சபைகள்

பிரதேச சபைகள் 1978இல் தாபிக்கப்பட்டது. இதன் உறுப்புரிமையானது கிராமோதய சபைத்தலைவர் மற்றும் பதவி வழிகாரணமாக உதவி அரசாங்க அதிபர், உதவி அரசாங்க பிரிவில் கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் (உதாரணமாக கிராம சேவையாளர் போன்றோர்) இடம் பெறுவர். இச் சபையின் தலைவராக பதவி வழியற்ற யாராயினும் ஒருவர் (சபையால் தெரிவு செய்யப்படுபவர்) இடம் பெறுவார். இச் சபையின் செயலாளராக பதவி வழிகாரணமாக உதவி அரசாங்க அதிபர் இடம் பெறுவார்.

### 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டம்

கிராம சபைகள் மற்றும் பட்டின சபைகள் சட்டத்தின் கீழ் இருந்த அதிகாரங்கள் சகிதம் இவ்விரண்டு நிறுவனங்களினதும் பொறுப்புக்களைச் செயற்படுத்தும் வகையிலும் அமைந்த மாவட்ட அபிவிருத்திச் சபை எனப்படும் புதியதொரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இச் சட்டத்தின் மூலம் அப்போதிருந்த பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகள் இல்லாது ஒழிக்கப்பட்டன. இந்த மாவட்ட அபிவிருத்திச் சபையில் பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்வாங்கப்பட்டனர். மேலும் குறைந்தளவு எண்ணிக்கையான மக்கள் உறுப்பினர்களே தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு நியமிக்கப்பட்டார்கள்.

> **1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க மாவட்ட அபிவிருத்திச் சபைகள் சட்டத்தின் மூலம் அப்போதிருந்த பட்டின சபைகள் மற்றும் கிராம சபைகளை இல்லாது ஒழிக்கப்பட்டு மாவட்ட அபிவிருத்திச் சபைகள் உருவாக்கப்பட்டன.**

இவ் அபிவிருத்தி சபைகளை நிறுவுவதற்கு இரண்டு பிரதான நோக்கங்கள் காணப்பட்டன. அந்தந்த மாவட்டங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மத்திய அரசின் மாவட்ட மட்ட நடவடிக்கைகளையும் இணைப்புச் செய்கின்ற நிறைவேற்று அதிகாரமுள்ள மாவட்ட அமைச்சரின் ஊடாக நிர்வாகத்தைப் பன்முகப்படுத்துதல் அதன் முதல் நோக்கமாகும். மாவட்ட மட்ட திட்ட முறைமைகளை அமுலாக்கம் செய்கையில் அபிவிருத்தி சபைகள் ஊடாக பிரதேசவாசிகளான மக்களின் பங்களிப்பை அதற்காகப் பெற்றுக்கொள்வது அதன் இரண்டாவது நோக்கமாகும்.

மாவட்ட அபிவிருத்தி திட்டங்களைத் தயாரித்தல், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல், அந்நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் அரசாங்க செயற்திட்டங்களை அமுலாக்கம் செய்கின்ற

> **மாவட்ட அபிவிருத்தி சபை அதிகாரப்பரவலாக்கத்துக்கான பொறிமுறையாக கூறப்பட்டபோதும் இது முழு அதிகாரத்தையும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் கபட விதிகளையே கொண்டிருந்தது. இந்த சபையில் அங்கம் வகிக்கும் மாவட்ட அமைச்சரையும், செயலாளரையும் ஜனாதிபதியே நியமிப்பார். ஆக அவர்கள் ஜனாதிபதியின் நம்பிக்கைக்கு உரியவர்களே. நடைமுறையிலும் அது தான் நிகழ்ந்தது.**

போது எதிர்கொள்ளவேண்டி வருகின்ற இடையூறுகளுக்கான மாற்றுத் தீர்வுகளை முன்வைத்தல் மற்றும் பிரதேசத்திற்குள்ள திணைக்களங்களுக்கிடையிலான நடவடிக்கைகளை இணைப்புச் செய்தல் என்பன இவ் அபிவிருத்தி சபை முறைமை ஊடாக எதிர்பார்க்கப்பட்ட மற்றொரு பணியாகும்.

1981.07.01 ஆம் திகதி 24 மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்குரிய அதிகாரங்களுடன், அன்றைய காலகட்ட 11 அமைச்சுக்களுக்குரிய 15 அபிவிருத்தித் திட்டங்களும் கையளிக்கப்பட்டன. குறித்த மாவட்டங்களில் இருந்த உள்ளூராட்சி மன்றங்கள் "அபிவிருத்திச் சபை உப அலுவலகம்" எனப் பெயரிடப்பட்டன. 549 கிராம சபைகளும், 83 பட்டின சபைகளும் இதன் மூலம் இல்லாதொழிக்கப்பட்டன.

இவற்றில் 7781 உறுப்பினர்கள் அடங்கியிருந்ததுடன், இவற்றுள் 156 பேர் மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள் ஆவர். ஆனால் இம் முறை, மக்களுக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் இடையே பெரிய இடைவெளியைத் தோற்றுவித்தது.

இதை நிவர்த்தி செய்யும் முகமாக அப்போதிருந்த 4712 கிராம சேவகர் பிரிவுகளிலும் தலா ஒரு "கிராமோதய சபை" (Gramodaya Mandala) தாபிக்கப்பட்டது.

### மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் நிர்வாகத்திலிருந்த நடைமுறைச் சிக்கல்கள்

இந்த சபையில் அங்கம் வகிக்கும் மாவட்ட அமைச்சரையும், செயலாளரையும் ஜனாதிபதியே நியமிப்பார். ஆக அவர்கள் ஜனாதிபதியின் நம்பிக்கைக்கு உரியவர்களே. நடைமுறையிலும் அது தான் நிகழ்ந்தது.

இம் மாவட்ட அமைச்சர் தமது செயற்பாடுகள் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு பொறுப்பு கூற வேண்டியவராகவும் காணப்பட்டார். இக் கட்டுப்பாடுகள் அனைத்தும் மாவட்ட அமைச்சரின் சுதந்திரமான செயற்பாட்டிற்கு இயல்பாகவே கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருந்தன.

(தொடரும்...)

# புலி உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தில் பலர் சிறையில் இருக்கின்றனர்

## ஹிருணிகா சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**எந்த குற்றச்சாட்டுக்களும் இல்லாமல் விடுதலைப்புலி உறுப்பினர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டு பலர் சிறைச்சாலைக்குள் உள்ளனர் என ஹிருணிகா பிரேமச்சந்திர சுட்டிக்காட்டினார்.**



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று சிறைச்சாலைகளில் புலிகளின் உறுப்பினர்கள் எனக் கூறப்படும் பலர் இருக்கிறார்கள். இவர்களில் சிலருக்கு வழக்குக்கூட தொடரப்படவில்லை.

அதேபோல், இராணுவத்தினரும் நீண்டகாலமாக சிறைகளில் இருக்கிறார்கள். இதுதான் இன்றைய நிலைமை.

இந்த நிலையில், கருணா தொடர்பாக அனைவரும் கருத்து வெளியிடுகிறார்கள். கருணாவை நாம் விமர்சித்தபோது, எம்மீது குற்றஞ்சாட்டினார்கள்.

இன்று கருணா, ராஜபக்ஷவினருக்கு சிறந்த ஒரு நபராகவே காணப்படுகிறார். இதனால்தான் கருணாவின் கருத்தை மூடி மறைக்க இவர்கள் முற்படுகிறார்கள்" என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# கல்முனை விபத்தில் ஒருவர் காயம்

(கல்முனை)

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை தாளவட்டுவான் சந்தியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

மருதமுனையிலிருந்து நற்பிட்டிமுனை பகுதியை நோக்கி வந்துகொண்டிருந்த கனரக வாகனமும் நற்பிட்டிமுனை பகுதியில் இருந்து கல்முனையை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதனாலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

குறித்த விபத்தில் காயமடைந்த மோட்டார் சைக்கிளின் சாரதி சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

# ஐ.சி.சி தலைவர் பதவியில் இருந்து விடை பெற்றார் ஷசாங்க் மனோகர்

(கொழும்பு)

சர்வதேச கிரிக்கெட் பேரவையின் தலைவர் பதவியில் இருந்து ஷசாங்க் மனோகர் விலகினார்.

அவரது நான்கரை ஆண்டு கால பதவிக்காலம் முடிவுக்கு வந்த நிலையில் நேற்று ஐசிசி தலைவர் பதவியில் இருந்து விடை பெற்றார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐசிசி கூட்டத்தில் துணைத் தலைவர் இம்ரான் கவாஜா தேர்தல் நடைபெறும் வரை தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொள்ள சம்மதம் தெரிவித்ததால் ஷசாங்க் மனோகர் விலகினார். (ஜ-4)

# போலி ஆவணங்கள் தயாரித்த ஐவருக்கு 67 வருட கடூழிய சிறை

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள காணியொன்றை போலி ஆவணங்கள் தயாரித்து விற்பனை செய்தமை தொடர்பில் ஐவருக்கு 67 வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்கவினால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் பிரதிவாதிகள் ஐவருக்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த மேல் நீதிமன்ற நீதிபதி, பிரதிவாதிகள் ஐவரும் இணைந்து குறித்த காணியின் உரிமையாளருக்கு ஒரு கோடியே 40 இலட்சம் ரூபாவை நட்ட ஈடாக செலுத்த வேண்டும் என்றும் தீர்ப்பில் அறிவித்தார்.

அதன்படி முதலாவது பிரதிவாதிக்கு 25 வருட சிறைத்தண்டனையும் இரண்டாம், மூன்றாம் மற்றும் ஐந்தாம் பிரதிவாதிகளுக்கு தலா 10 வருட கடூழிய சிறைத்தண்டனையும் நான்காவது பிரதிவாதிக்கு 12 வருட கடூழிய சிறைத்தண்டனையும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கொள்ளுப்பிட்டி மெரயின் டிரைவ் வீதியிலுள்ள எலோயி மாவத்தையில் அமைந்துள்ள காணியொன்றுக்கு கடந்த 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ஆம் திகதி போலி ஆவணங்களைத் தயார் செய்து அதனை விற்பனை செய்தமை மற்றும் அதற்கு ஆதரவளித்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த பிரதிவாதிகள் ஐவருக்கும் எதிராக சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், நீண்ட வழக்கு விசாரணைகளின் பின்னர் தீர்ப்பை அறிவித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க, ஐவரையும் குற்றவாளியாக அறிவித்து தீர்ப்பளித்தார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## காந்திய சிந்தனை!

1922 மார்ச் மாதம் 18 ஆம் திகதி ஒரு மாபெரும் விசாரணை ஆரம்பமாகியது. குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவர் தம் குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவர் ஒரு வாக்குமூலம் கொடுத்தார்.

கடைசியாக அவர் என்ன சொன்னார் தெரியுமா? "நீதிபதி அவர்களே! நீங்கள் பதவியை விட்டு விலக வேண்டும். இல்லை என்றால் எனக்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு திரும்பி வந்து உட்கார்ந்தார். அவர் யார் தெரியுமா? அவர் தான் மகாத்மா காந்தி.

ஒத்துழையாமை இயக்கம் நடந்த பொழுது "யங் இந்தியா" பத்திரிகையிலே வெளியான மூன்று கட்டுரைகளுக்காக அரசு எதிர்ப்புக் குற்றம் என்று சொல்லி அவரையும் சங்கர்லால் பாங்கரையும் கைது செய்தார்கள்.

அப்பதான் இந்த விசாரணை நடந்தது.

காந்தியடிகள் உட்கார்ந்தவுடன் நீதிபதி புரூம்பீல்ட் அவரைப் பார்த்து சொன்னார்...நான் இதுவரைக்கும் எத்தனையோ குற்றவாளிகளை விசாரித்திருக்கேன். இனிமேலும் விசாரிக்கப் போகிறேன். எல்லாக் குற்றவாளிகளிலிருந்தும் நீங்கள் மாறுபட்டவராக இருக்கிறீர்கள். இலட்சக்கணக்கான மக்களுக்கு நீங்கள் மாபெரும் தலைவராக இருக்கிறீர்கள். உங்கள் கருத்துக்கு மாறுபட்டவர்கள் கூட உங்களுடைய உயர்ந்த கொள்கைகளையும் தவ வாழ்க்கையையும் பாராட்டுகிறார்கள் என்று சொன்னார்.

கடைசியாக தீர்ப்பு வழங்கிற பொழுது...

காந்திஜிக்கு ஆறு வருட சிறைத் தண்டனை விதித்துவிட்டு "இந்த அரசாங்கம் பிற்காலத்திலே உங்களுடைய தண்டனையின் அளவைக் குறைக்குமானால் என்னைவிட மிகுந்த மகிழ்ச்சியடையக் கூடியவர்கள் வேறு யாரும் இருக்க மாட்டார்கள்" என்றார்.

காந்திஜி தென்னாபிரிக்காவிலே இருந்த பொழுது அவரை சிறையிலே போட்டவர் "ஸ்மட்ஸ்" அவர் என்ன செய்தார் என்றால் தன்னுடைய நூல் நிலையத்திலிருந்து சில புத்தகங்களை எடுத்து அதையெல்லாம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைக்கும் சிறையிலே இருக்கின்ற காந்திஜிக்கு மிகவும் அக்கறையாக கொடுத்து அனுப்புவாராம் படிப்பதற்கு.

காந்திஜி அப்பொழுது வாரா வாரம் சிறையிலே ஜோடி ஜோடியாக பாதரட்சை அதாவது மிதியடிகள் தயார் செய்து கொண்டிருந்தார். விடுதலையானவுடன் காந்திஜி ஸ்மட்ஸ்ஸை போய் பார்த்திருக்கின்றார். சிறையில் தான் தயார் செய்த ஒரு ஜோடி பாதரட்சையை ஸ்மட்ஸுக்கு பரிசாகக் கொடுத்திருக்கிறார்.

ஸ்மட்ஸ் அதைப் பற்றி என்ன சொல்கிறார் தெரியுமா?

நான் சிறையிலே அடைத்த அந்த மனிதருடைய தாராள குணத்தை முதலிலே புரிந்து கொண்டவன் நான்தான்.

அவர் எனக்குக் கொடுத்த பரிசு பாதரட்சை தான். இருந்தாலும் கூட அதிலே என் காலை வைக்கிறதுக்கு எனக்குத் துணிச்சல் வரவில்லை.

தாராள குணத்திற்கும் அன்பிற்கும் அடையாளமாக இருந்தது அந்த பாதரட்சை. ரொம்பக் காலம் வரைக்கும் அதை ஒரு ஞாபகச் சின்னமாகவே வைத்திருந்தேன்.

பின்னர் தான் மிகவும் விசேடமான நாட்களிலே மட்டும் அதை அணிந்து கொள்ள ஆரம்பித்தேன் என்று சொல்கிறார். இப்படித் தண்டனை கொடுத்தவர்கள் மனதையே நெகிழ வைக்க முடியும் என்றால் அது எப்பேர்ப்பட்ட சக்தியாக இருக்க வேண்டும்.

அந்த சக்தி காந்தியிடம் இருந்தது. கோபம் என்கின்ற உணர்ச்சி இருக்கே அதுவே கூட காந்தியிடம் போன பொழுது அது சத்தியாக் கிரகமாத்தான் வெளியே வந்தது.

தென்னாபிரிக்காவிலே மாரிஸ்பர்க் ரயில் நிலையத்திலே கடுமையான குளிரிலே நடுநிசியிலே நிறவெறி காரணமாக ரயில் பெட்டியிலேயிருந்து வெளியே தள்ளப்பட்டு தன்னந் தனிமையிலே தவித்த பொழுது காந்திக்கு ஏற்பட்ட நியாயமான அந்த கோப உணர்ச்சிதானே பிற்காலத்திலே ஒரு மிகப் பெரிய சத்தியாகிரகப் போராட்டமாக உருவாகியது.

அப்பேர்ப்பட்ட காந்திஜி சொல்கிறார்...

"எனக்கு நகைச் சுவை உணர்வு மட்டும் இல்லை என்றால் நான் எப்பொழுதோ தற்கொலை செய்து கொண்டிருப்பேன் என்கின்றார்.

நமக்குத் தெரிந்த ஒருத்தர் இருக்கின்றார். அவர் சொல்லுவார் நான் ஆரம்பத்திலெ வயலினிஸ்ட்டா இருந்தேன். இப்பொழுது நான் வயலினிஸ்டா இருக்கேன்டி என்பார். அது உண்மை தான்.


அவர் முதலிலே வயலின் வாசித்துக் கொண்டிருந்தார். ஒரு சமயம் அவர் வாசிப்பை கேட்ட ரசிகர்களிலே ஒருத்தன் வேகமாக மேடைக்கு வந்து அவருடைய வயலினை பிடுங்கிக் கொண்டு போனார். அதிலேயிருந்து இவர் தான் வயலினிஸ்ட்டா இருக்கிறார்.

# தேர்தல் பிரசாரங்களில் எனது ஒளிப்படத்தை பயன்படுத்தக் கூடாது

## ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

**எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக தனது ஒளிப்படத்தை பயன்படுத்தக் கூடாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



அத்தோடு, பாதுகாப்பு சேவைகள், பொது நிர்வாகம், அரச சேவைகள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்கள் எவரும் அரசியல் பணிகளில் ஈடுபடக் கூடாதென றும் ஜனாதிபதி பணித்துள்ளார்.

இம்முறை பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது பிரசார நடவடிக்கைகளில் ஜனாதிபதியின் ஒளிப்படங்களைப் பயன்படுத்துவதாக ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.ஜயசுந்தர குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இராணுவம் மற்றும் அரச அதிகாரிகளை சம்பந்தப்படுத்தி பல்வேறு நியமனங்களைப் பெற்றுத் தருவதாக குறிப்பிடுவதாக தகவல்கள் கிடைத்துள்ளதாக தெரிவித்து, பீ.பி.ஜயசுந்தர அனைத்து ஆளுநர்கள், அமைச்சின் செயலாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், நியதிச் சட்ட நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் ஏனைய துறைத் தலைவர்களுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குறித்த கடிதத்தில் அனைத்து அரச ஊழியர்களும் இந்த அறிவுறுத்தலை பின்பற்றுமாறும் ஜனாதிபதியின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இதன் பிரதியொன்று தேர்தல் ஆணைக் குழுவின் தலைவருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# துறைமுக ஊழியர்களின் போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

கொழும்பு துறைமுக தொழிற்சங்க ஊழியர்கள் மூவர் 187 அடி உயரமான பளு தூக்கியின் மீது ஏறி முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் நேற்றும் தொடர்கிறது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தில் பொருத்துவதற்காக சீனாவிலிருந்து கொண்டுவரப்பட்ட புதிய பளு தூக்கிகளை அங்கு உடனடியாக பொருத்துமாறு கோரியே அவர்கள் இவ்வாறான போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், தங்களது கோரிக்கைக்கு தீர்வு கிடைக்காவிட்டால், தொடர்ச்சியாக உணவு தவிர்ப்பு போராட்டத்தில் ஈடுபடத் தயாராகவுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். துறைமுகத்தின் கிழக்கு முனையத்தினை இந்தியாவிற்கு வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்வேறு தொழிற்சங்க நடவடிக்கைகள் ஏற்கனவே முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இதன்போதே கடந்த அரசாங்கக் காலத்தில் சீனாவில் இருந்து குறித்த மூன்று பளு தூக்கிகளும் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தன.

இந்த பளு தூக்கிகளை கிழக்கு முனையத்தில் பொருத்த வேண்டும் என தொழிற்சங்கங்கள் தொடர்ச்சியாக தெரிவித்து வருகின்ற போதிலும் இதற்கு இதுவரை அனுமதி கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# பிள்ளையானை தொடர்ந்தும் சிறையில் வைத்திருக்க முயற்சி

## கருணா குற்றச்சாட்டு



(கொழும்பு)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனை (பிள்ளையான்) தொடர்ந்தும் சிறையில் தடுத்து வைப்பதற்கே அவரது கட்சியின் செயலாளர் செயற்படுவதாக கருணா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரிக்கும் வகையிலான பொதுக் கூட்டம் களுவாஞ்சிக்குடியில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே முன்னாள் பிரதியமைச்சர் கருணா மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு, பிள்ளையானை குழிதோண்டி புதைக்க வேண்டும் என்பதற்காகவே தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியில் வேட்பாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



அக்கட்சியில் உழைத்தவர்களை வேட்பாளராக நியமித்திருந்தால், அக்கட்சியில் பிள்ளையான் வெற்றிபெற்றிருப்பார் எனவும் கருணா தெரிவித்தார். (2)

# செய்தித்துளிகள்

## 848 கடற்படையினர் குணமடைந்தனர்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 6 கடற்படையினர் பூரணமாக குணமடைந்து வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளதாக கடற்படை பேச்சாளர் தெரிவித்தார்.

அதன்படி, இதுவரை 848 கடற்படையினர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கையில் இதுவரை 904 கடற்படையினருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் 56 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.(2)

## ரி-56 ரக துப்பாக்கிகள் மீட்பு



(ஏறாவூர்)

மட்டக்களப்பு,அத்துருகிரிய ஆகிய பகுதிகளில் ரி-56 ரக துப்பாக்கிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டன.

மட்டக்களப்பில் கைப்பற்றப்பட்ட ரி-56 ரக துப்பாக்கி பாவிக்க முடியாத நிலையில் காணப்பட்டதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். (2)

## கொவிட் - 19 வைரஸை அடையாளப்படுத்தும் தானியங்கி பி.சி.ஆர்.இயந்திரங்கள்



(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் தொற்றை விரைவில் அடையாளப்படுத்தும் தானியங்கி பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரங்களை அகில இலங்கை றோட்டரிக்கழகம் அரச மருத்துவ அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளது.

குறித்த பி.சி.ஆர்.இயந்திரங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விளக்கமளிக்கும் நிகழ்வொன்று நேற்று முன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஜ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார் மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 80 | 70 | 50 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 110 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 160 | 300 |
| தக்காளி | 200 | 180 | 170 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 100 |
| கோவா | 160 | 120 | 120 | 120 |
| கரட் | 170 | 180 | 170 | 200 |
| பூசணி | 40 | 35 | 40 | 50 |
| புடோல் | 80 | 80 | 60 | 120 |
| வாழைக்காய் | 120 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 200 | 200-300 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 150 | 130 | 100 | 100 |
| பயற்றங்காய் | 180 | 200 | 180 | 120 |
| லீக்ஸ் | 130 | 140 | 140 | 140 |
| பீற்றூட் | 120 | 120 | 110 | 120 |
| கறிமிளகாய் | 160 | 200 | 120 | 240 |
| முருங்கைக்காய் | 300 | 350 | 250 | 250 |
| போஞ்சி | 180 | 140 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | — | 80 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 30 | 30 |
| தேசிக்காய் | 250 | 350 | 350 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 35-60 | 40-70 |
| இராசவள்ளி | 350 | 300 | 300 | 280 |
| வெங்காயப்பூ | 300 | 200 | — | — |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 40 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 50 | 60 |




# புதிய நண்பர்கள்



ஆதிரையும் புனிதாவும் நண்பர்கள். இருவரும் ஒரே பள்ளியில் படித்து வந்தார்கள். ஆதிரை எப்போதும் புனிதாவைப் பற்றித்தான் தன் வீட்டில் பேசிக்கொண்டே இருப்பாள்.

இவ்வாறாக இருவருக்கும் பள்ளி நாட்கள் மகிழ்ச்சியாக போய்க்கொண்டிருந்தது. ஒரு நாள் ஆதிரை மிக வருத்தத்துடன் வீடு திரும்பினாள். ஏன்டா கண்ணா உன் முகம் வாடி இருக்கு என்று அம்மா கேட்க, ஆதிரை அழத் தொடங்கினாள்.

புனிதா இனிமேல் என் தோழியே இல்லை என்றாள். ஏன்டா செல்லம் என்று கேட்டார்? இன்று பள்ளிக்கு மாறன் என்கிற புதிய மாணவன் சேர்ந்தான். அவன் புனிதா வீட்டின் அருகில் வசிப்பதால் இருவரும் இப்போது நண்பர்கள் ஆகிவிட்டார்கள். இருவரும் மட்டும் சேர்ந்தே விளையாடினார்கள் .

என்னை அவர்கள் கண்டு கொள்ளவில்லை என்றாள். இதற்காகவா அழுகிறாய்? நீயும் அவர்களுடன் சேர்ந்து விளையாடப் பழகு. அவர்கள் வரவில்லை என்றால் மற்ற நண்பர்களுடன் சேர்ந்து விளையாடப் பழகு. அதன் மூலம் உனக்கு புதிய நண்பர்கள் கிடைப்பார்கள் என்று அம்மா கூறினார். ஆதிரை மறுநாள் பள்ளிக்குச் சென்றாள்.

அன்றும் புனிதாவும் மாறனும் மட்டும் சேர்ந்தே விளையாடினார்கள். ஆதிரைக்கு வருத்தமாக இருந்தது. அவர்கள் அருகில் போய் நின்றாள்.

அவர்கள் விளையாடிக் கொண்டிருந்த ஆர்வத்தில் ஆதிரையைக் கண்டுகொள்ள வில்லை.

வருத்தத்துடன் ஆதிரை தனியாக மரத்தின் அடியில் போய் அமர்ந்திருந்தாள். அங்கு சில வகுப்புத் தோழி கள் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அதில் ஒரு தோழி ஆதிரையிடம் எங்களுடன் விளையாட வருகிறாயா? என்று கேட்டாள். ஆதிரை முதலில் தயங்கினாள். சிறிது நேரத்தில் சரி நானும் வருகிறேன் என்றாள்.

மிகவும் மகிழ்ச்சியாக விளையாடினார்கள்.

அன்று வீட்டிற்கு ஆதிரை மகிழ்ச்சியுடன் சென்றாள். அம்மாவிடம் போய் நீங்கள் சொன்னதைப் போல் நான் இன்று மற்ற நண்பர்களுடன் சேர்ந்து விளையாடினேன்.

அவர்களும் என்னுடன் நன்றாக விளையாடினார்கள். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது என்று கூறினாள். அருமை கண்ணா நாம் எப்போதும் ஒருவர் மட்டும் தான் நண்பர் என்று இருக்காமல் எல்லோருடனும் சேர்ந்து பழகிக் கொள்ள வேண்டும்.

அப்போதுதான் நிறைய நண்பர்கள் நமக்கு இருப்பார்கள் என்றார். தினமும் ஆதிரை தன் புதிய நண்பர்களுடன் விளையாடி மகிழ்ந்தாள். சில நாட்கள் கழித்து புனிதாவும் மாறனும் இவர்களுடன் சேர்ந்து விளையாட ஆரம்பித்து விட்டார்கள்.


இப்போது ஆதிரைக்கு மட்டும் அல்ல எல்லோருக்கும் புதிய நண்பர்கள் கிடைத்து விட்டார்கள்.

## கொக்கரக்கோ சேவலே




கொக்கரக்கோ
சேவலே
கொண்டை
ஆட்டும் சேவலே
நித்தம் எம்மை
காலையிலே
நேரத்திலே
எழுப்புவாய்
தூங்குகின்ற
உலகையே
குரல் கொடுத்து
எழுப்புவாய்
கொக்கரக்கோ
சேவலே
வாழ்க உந்தன்
சேவையே!

## உங்களுக்குத் தெரியுமா?




- டைனோசர்களை விடப் பெரியவை இந்த திமிங்கலங்கள்.
- நீலத் திமிங்கலம் (Blue Whale) கடலில் வாழும் பாலூட்டி (Marine Mammal) வகையைச் சார்ந்தது.
- இது 80 முதல் 100 அடி நீளம் வரை இருக்கும்.
- இதன் எடை 150 தொன்கள் (அதாவது, 1,50,000 கிலோகிராம்) வரை இருக்கும்.
- நீலத் திமிங்கலத்தின் குட்டி பிறக்கும்போதே 2 தொன்கள் (அதாவது 2 ஆயிரம் கிலோகிராம்) வரை இருக்குமாம்.
- இது 80 முதல் 90 ஆண்டுகள் வரை வாழும். இதுவரை கண்டறியப்பட்ட நீலத் திமிங்கலத்தின் அதிகபட்ச வயது 110 ஆண்டுகள்.
- இத் எழுப்பும் ஒலி ஜெட் விமானத்தின் எந்திரத்தின் ஒலியை விட அதிகமாக இருக்கும். அதாவது ஏறத்தாழ 188 டெசிபிள்கள்.
- ஒரு நீலத் திமிங்கலத்தின் எடை சராசரியாக 30 வளர்ந்த யானைகளின் எடைக்குச் சமமாக இருக்கும்.
- க்ரில் எனப்படும் சிறு இறால் வகை மீன்களை திமிங்கலங்கள் விரும்பி உண்ணும். ஒரு நாளுக்கு ஒரு திமிங்கலம் உண்ணும் உணவின் எடை ஏறத்தாழ 4 தொன்கள் (4,000 கிலோகிராம்) வரை இருக்கும். அதாவது ஒரு யானையின் எடைக்குச் சமமான ஒரு க்ரில் மீன் கூட்டத்தை உண்ணும்.

## கூட்டுங்கள்




## தொடர்புபடுத்துங்கள்




## மூளைக்கு வேலை
## 3 புதிருக்கான
## விடை



03) 4 முட்டைகள்



பொய் சொல்பவன் அதில் தனக்கு வெற்றி கிடைக்கவில்லை என்று வருந்துகிறான். பொய் சொல்வதற்கு முன்பு பிறரை வஞ்சிக்கத் திட்டம் தீட்டுகிறான். அவன் உள்ளம் பரிதவிக்கிறது. *– மகா வீரர்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கணக்குக் கேட்டால் கட்சியிலிருந்து வெளியேறு

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகமே அரசியல் பாசறையின் பல்கலைக்கழகம்.

தமிழகத்தின் மாபெரும் அரசியல்வாதிகளை உருவாக்கிய பெருமையும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு.

பேரறிஞர் அண்ணாதுரை, கலைஞர் கருணாநிதி, புரட்சித் தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரன், நாவலர் நெடுஞ்செழியன் என ஒரு பெரும் பட்டியலை வாசிக்க முடியும்.

பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பின்னர் தமிழகத்தின் முதலமைச்சராக நாவலர் நெடுஞ்செழியனே வந்திருக்க வேண்டும்.

இருந்தும் கலைஞர் கருணாநிதி அதனைத் தனதாக்கிக் கொள்ள, தன் ஆயுட் காலம் வரையில், நாவலர் நெடுஞ்செழியனால் தமிழகத்தின் முதலமைச்சராக வரவே முடியவில்லை.

அதேநேரம் நாவலர் நெடுஞ்செழியனுக்கு முதலமைச்சர் பதவியை ஒரு தடவையேனும் விட்டுக் கொடுக்க விரும்பாத கலைஞர் கருணாநிதி பின்னாளில் பட்ட கதை நீங்கள் அறிந்ததே.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய பதவியில் இருந்த எம்.ஜி.ஆர் ஒரு முறை கலைஞர் கருணாநிதியிடம் கட்சிக் கணக்கைக் கேட்டார்.

கட்சிக் கணக்கைக் கேட்டவருக்கு அதனைக் கொடுப்பதுதான் முறைமை.

ஆனால் கலைஞர் கருணாநிதி கணக்குக் கொடுப்பதற்குப் பதிலாக, கணக்குக் கேட்டால் கட்சியில் இருந்து வெளியேற வேண்டும் என எம்.ஜி.ஆரை அதட்டினார்.

பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் என்றெல்லாம் திரையுலகில் கோலோச்சிக் கொண்டிருந்த எம்.ஜி.ஆர்; திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்து வெளியேறி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை (அதிமுக) ஆரம்பித்தார்.

எம்.ஜி.ஆர் ஆரம்பித்த கட்சிக்கு தமிழகத்தில் அமோக ஆதரவு இருந்தது. அதிலும் திராவிட முன்னேற்றக் கழகத்து முக்கிய உறுப்பினர்களும் தொண்டர்களும் எம்.ஜி.ஆரின் அதிமுகவில் இணைந்து கொண்டனர்.

குறிப்பாக நாவலர் நெடுஞ்செழியன் எம்.ஜி. ஆருடன் சேர்ந்தார். தனக்கு ஒருபோதும் சந்தர்ப்பம் தராத கலைஞர் கருணாநிதியுடன் இருப்பதை விட, எம்.ஜி.ஆருடன் இருப்பதே தனக்குக் கௌரவம் என நாவலர் முடிவு செய்தார்.

இதில் அதிசயமென்னவெனில், எம்.ஜி.ஆர் புதுக்கட்சி ஆரம்பித்து திமுகவை எதிர்த்து தேர்தலில் களமிறங்கிய பின்பு எம்.ஜி.ஆர் இருக்கும் வரை, கலைஞர் கருணாநிதியால் தமிழகத்தின் முதலமைச்சராக வரவே முடியவில்லை.

அப்போதுதான் கலைஞர் கருணாநிதி நினைத்தாராம் கட்சிக் கணக்கை எம்.ஜி. ஆருக்கு காண்பித்திருக்கலாமென்று.

ஆக, கணக்கை வெளியிடுவதே நேர்மைக்கான அடையாளம். இவை ஒரு தகவல் மட்டுமே.

அண்மையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் தமிழரசுக் கட்சிக்குப் புலம்பெயர் அமைப்புகள் வழங்கிய 21 கோடி ரூபாவுக்கு என்ன நடந்தது என்று கேட்டிருந்தார்.

அதற்கான பதில் அவரைக் கட்சியில் இருந்து விலத்துவதான அறிவிப்பாக இருந்தது.

இப்போது திமுக–அதிமுக என்ற இரு கட்சிகள் பற்றி ஏலவே கூறியதை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள்.

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு வழங்கியமை தவறு

## என்கிறார் விஜயதாஸ ராஜபக்ஷ

(கொழும்பு)

**அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிற்கு வழங்கியமை தவறான செயற்பாடாகும் என்றும் அமெரிக்காவை பகைத்துக்கொள்ள வேண்டிய தேவையும், எமது நாட்டின் இறையாண்மையை விட்டுக்கொடுக்க வேண்டிய தேவையும் அரசாங்கத்துக்கு கிடையாது என்றும் முன்னாள் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.**

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

திருகோணமலை துறைமுகத்தை கைவசப்படுத்தும் அடிப்படையிலே எம். சி. சி ஒப்பந்தம் அபிவிருத்திக்கான நிதி வழங்கல் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்டன.

நாட்டிற்கெதிரான ஒப்பந்தங்களை செய்து கொள்ளவேண்டியதேவை தற்போதைய அரசாங்கத்துக்கு கிடையாது.

கடந்த அரசாங்கம் சர்வதேச நாடுகளுடன் ஏற்படுத்தியுள்ள சிக்கல் நிலையை இராஜதந்திர மட்டத்தில் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து தீர்வு காணவே முயல்கிறோம்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கப் பெறும் என்பதை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ நன்கு அறிவார்.

இதன் காரணமாகவே இவர்கள் பொதுத் தேர்தலுக்கு எதிராக நீதிமன்றில் 11 மனுக்கள் தாக்கல் செய்தார்கள்.

அனைத்துச சூழ்ச்சிகளையும் எதிர்கொண்டு பொதுஜன பெரமுன நிலையான அரசாங்கத்தை அமைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### அன்பும் துறவும்

உரிமைகள், தகுதிகள் ஆகியவற்றைத் துறந்தவர் மட்டுமே உண்மையாக அன்பு செலுத்த முடியும். நீ எந்த அளவு துறந்திருக்கிறாயோ, அந்த அளவு அன்பு செலுத்தும் திறமையுடையவனாகிறாய்.

பெரும்பாலும் மக்கள், துரப்பவர்களால் நேசிக்க முடியாது என்றும் நேசிப்பவர்களால் துறக்க முடியாதென்றும் நினைக்கின்றனர். ஏனென்றால் துறவிகள் என அழைக்கப்படுபவர்கள் அன்பில்லாதவர்களாயும் அன்புடையவர்கள் என அழைக்கப்படுபவர்கள் தனக்கே சொந்தமென மிகவும் உரிமை கொண்டாடித் தேவைகளைக் கொண்டிருப்பவர்களாயும் உள்ளனர்.

உண்மையான அன்பு, தனக்கு மட்டும் எனும் உரிமை கொள்ளாது சுதந்திரத்தைக் கொடுக்கிறது. துறவு என்பது சுதந்திரம்தானே தவிர வேறேதுமிலலை. சுதந்திரத்தில்தான் அன்பு முழுமையாக மலாகிறது. அன்பில் உள்ள நீ " எனக்கு எதுவும் வேண்டாம, இது மாத்திரம்தான் வேண்டும்" என்கிறாய். "எனக்கு எதுவும் வேண்டாம்" " நான் விடு பெற்றவனாக இருக்கிறேன்" என்பது துறவு. அன்பில் மற்றத் தேவைகள் இல்லை. துறவு எந்தத் தேவைகளையும் பெற்றிருப்பதில்லை. அன்பும் துறவும் ஒன்றுக்கு ஒன்று மாறாகத் தோன்றினாலும் இவை இரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் தான். (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** நீர்வேலி சந்தி பிரதேசம், சிறுப்பிட்டி, குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதி, CC தமிழ்க்கலவன் பாடசாலை, வராகி, சாவலகாடு, காக்கைதீவு ஒரு பகுதி, ஆனைக்கோட்டை, ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடி, கலையரசி வீதி, நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம், வேலக்கைப் பிள்ளையார் கோவிலடி, அட்டகிரி, நவாலி, தாளையடி, வத்திராயன், உடுத்துறை ஆழியவளை, வெற்றிலைக் கேணி, முள்ளியான், கட்டைக்காடு, கேவில முள்ளியான் இராணுவ முகாம், கட்டைக்காடு 55 ஆவது டிவிசன் இலங்கை இராணுவ தலைமையகம், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், தாளையடி ஐஸ் தொழிற்சாலை, பன்னாலை, அம்பனை, அளவெட்டி, சிறுவிளான், Elephant Metal & Aluminium works (Pvt) Ltd Ampanai ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணி வரை துருக்கி நகரம் தாராபுரம் ஆகிய பிர தேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## பரீட்சை தொடர்பான தீர்மானம் அடுத்தவாரம்

(கொழும்பு)

பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின்னரே பரீட்சைகள் தொடர்பான இறுதித் தீர்மானம் அடுத்த வாரம் அறிவிக்கப்படவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத். தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ஜ-4)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**சத்தியத்தில் ஒருவன் நிலைத்து நின்றுவிட்டால் அவனுக்கு அதனால் தன்னையும் அறியாமலேயே ஒரு பலன் உண்டு. ஒருவன் சத்தியமே பேசிப் பழகிவிட்டால் முடிவில் அவன் எது சொன்னாலும் அது சத்தியமாகிவிடும். இப்படிப்பட்டவன் மனம் அறிந்து பொய் சொல்ல மாட்டான். -காஞ்சி பெரியவர்**

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

**இறைவன் மூன்று திருக்கண்களையுடையவன். சந்திரன், அக்கினி, சூரியன் என்ற மூன்று சுடர்பூக்களே மூன்று கண்கள். முருகன் இமையா நாட்டம் உடையவன். கண்களை மூடுவதில்லை. தாமரை சூரியனைக் கண்டு மலர்வது. நீலோற்பலம் என்ற குமுதம் சந்திரனைக் கண்டு மலர்வது. (தொடரும்)**

## அறிந்துகொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### 16 வகை இலட்சுமிகள்

**ஸ்ரீசௌபாக்யலட்சுமி:-** ஸ்ரீதேவி எங்கும் எதிலும் மகிழ்ச்சி உருவில் இருக்கின்றாள். நாம் எப் பொழுதும் மகிழ்ச்சியாக இருந்து கொண்டு மற்றவர்களின் மகிழ்ச்சிக்கும் காரணமாக இருக்க வேண்டும். பிறர் மனது நோகாமல் நடந்தால் ஸ்ரீசௌபாக்கியலட்சுமியின் அருளைப் பெற்று மகிழலாம்.

**ஸ்ரீசந்தானலட்சுமி:-** எல்லா குழந்தைகளையும் தன் குழந்தையாக பாவிக்கும் தாய்மை உணர்வு எல்லோருக்கும் வேண்டும். தாயன்புடன் ஸ்ரீசந்தான லட்சுமியை துதித்தால் நிச்சயம் பலனுண்டு.

**ஸ்ரீகாருண்யலட்சுமி:-** எல்லா உயிர்களிடமும் கருணையோடு பழக வேண்டும், உயிர் வதை கூடாது, உயிர்களை அழிக்க நமக்கு உரிமை இல்லை. ஜீவ காருண்ய ஒழுக்கத்தை கடைப்பிடித்தால் ஸ்ரீ காருண்ய லட்சுமியின் அருளைப் பெறலாம்.

**ஸ்ரீமகாலட்சுமி:-** நாம் நம்மால் முடிந்ததை மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டும் என்றுமே நம் உள்ளத்தல் உதவ வேண்டும் என்ற எண்ணம் உறுதியாக இருந்தால் நமக்கு ஒரு குறையும் வராது. மேலும ஸ்ரீ மகாலட்சுமி நம்மை பிறருக்கு கொடுத்து உதவும்படியாக நிறைந்த செல்வங்களை வழங்குவாள். **(தொடரும்)**

## எதியோப்பியாவில் பிரபல பாடகர் கொலை

# எதிர்ப்புப் போராட்டத்தில் வன்முறை

# 80 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

(அடிஸ் அபாபா)

எதியோப்பியாவில் பிரபல பாடகர் கொல்லப்பட்டதற்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தில் ஏற்பட்ட வன்முறையில் 81 பேர் உயிரிழந்தனர்.

கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் எதியோப்பியாவும் ஒன்று. இந்நாட்டின் பிரபல பாடகரான ஹஹலூ ஹண்டிசா கடந்த திங்கட்கிழமை மர்ம நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைச்சம்பவும் உள்நோக்கத்தோடு திட்டமிட்டு நடைபெற்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரோமியா என்ற இனக் குழுவைச் சேர்ந்த பாடகரின் கொலைச்சம்பவத்தை அடுத்து அந்த இன மக்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஒரோமியா மாகாணத்தில் அதிக எண்ணிக்கையில் வாழும் இந்த இன மக்கள் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டங்கள் சில பகுதிகளில் வன்முறையாக வெடித்தது.

இதையடுத்து, போராட்டங்காரர்களை கட்டுப்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதனால் போராட்டக்காரர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே மோதல் வெடித்தது. மேலும், பல கடைகள் போராட்டக்காரர்களால் தீ வைத்து கொளுத்தப்பட்டன.

இந்நிலையில், பாடகர் மர்ம நபர்களால் கொல்லப்பட்டதற்கு எதிராக கடந்த இரண்டு நாட்களாக நடந்து வரும் போராட்டத்தில் இதுவரை 81 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டங்கள் தொடர்பான வன்முறை இன்னும் நடைபெற்று வருவதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்ற அச்சம் நிலவி வருகிறது. (2)



# ஹொங்கொங்கில் வலுக்கும் போராட்டம்

## •300 பேர் கைது
## •கண்ணீர்ப்புகை பிரயோகம்




(ஹொங்கொங்)

சீனாவால் அறிமுகப்படுத்தப்பட்ட பெரும் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வீதிகளில் இறங்கிப் போராடியவர்கள் மீது ஹொங்கொங் பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம் மற்றும் கண்ணீர்ப்புகைத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

மேலும் குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட 300 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஹொங்கொங் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பலர் அமைதியான முறையில் போராட்டங்களை நடத்தியுள்ளனர் என்றும் ஆனால் கூட்டத்தை கலைக்கும் முயற்சியில் பொலிஸார் கண்ணீர்ப்புகை, நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட உலக நாடுகளில் கடும் எதிர்ப்பையும் மீறி ஹொங்கொங்கின் தன்னாட்சி அதிகாரத்தை குறைக்கும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை சீனா நேற்று நிறைவேற்றியது.

பிரித்தானிய காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்துவந்த ஹொங்கொங், 1997 ஆம் ஆண்டு உடன்படிக்கையின் படி சீனாவுடன் இணைந்தது. இதையடுத்து இரு நாடுகளுக்கு இடையேயான ஒப்பந்தத்தின் படி சீனா, ஹொங்கொங்கிற்கு தன்னாட்சி அதிகாரம் வழங்க வேண்டும் என பிரித்தானியா கேட்டுக்கொண்டது.

இதனால் தன்னுடன் இணைந்த ஹொங்கொங்கிற்கு தன்னாட்சி அதிகாரம் வழங்கியுள்ள சீனா, பாதுகாப்பு, வெளியுறவுக் கொள்கையை மட்டும் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இதனிடையே சீனாவிடம் இருந்து சுதந்திரம் கோரி ஹொங்கொங்கில் கடந்த ஆண்டு முதல் போராட்டங்கள் அதிகரித்து வருகின்றன.

இந்தப் போராட்டங்களின் போது ஹொங்கொங்கில் உள்ள சீனக் கொடிகள் மற்றும் அலுவலகங்கள் அனைத்தும் சூறையாடப்பட்டன. இதனால் ஆத்திரமடைந்த சீனா, ஹொங்கொங்கின் தன்னாட்சி அதிகாரத்தை குறைக்கும் வகையிலான தேசிய பாதுகாப்புச் சட்டத்தை கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது.


இதற்கு நாடாளுமன்றம் அங்கீகாரம் தெரிவித்துள்ள நிலையில்,

பல்வேறு உலக நாடுகளின் எதிர்ப்பையும் மீறி ஹொங்கொங்கின் தன்னாட்சி அதிகாரத்தை குறைக்கும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தை சீனா நிறைவேற்றியுள்ளது.

இந்நிலையில் இந்தச் சட்டத்தை கடுமையாக எதிர்த்து வரும் மக்கள் தற்போது சீனாவுக்கு எதிரான போரட்டத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# ஜி.பி.எஸ்.3 செயற்கைக்கோள்

## வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது



(நியூயோர்க்)

அமெரிக்காவின் "ஜி.பி.எஸ்.3" செயற்கைக் கோள் வெற்றிகரமாக புவிவட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டது.

அமெரிக்கா தனது விண்வெளி திட்டத்தின் ஒரு பகுதியாக 'ஜி.பி.எஸ்.3' செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவி வருகிறது.

இதன் முதல் செயற்கைக் கோள் கடந்த 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திலும் 2 ஆவது செயற்கைக்கோள் கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதமும் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

இந்த நிலையில் 3 ஆவது 'ஜி.பி.எஸ்.3' செயற்கைக்கோள் நேற்று முன்தினம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் கேப் கனவெரல் விமானப்படை தளத்திலிருந்து ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான 'பால்கன்9' ரொக்கெட் 'ஜி.பி.எஸ்.3' செயற்கைக்கோளை சுமந்து கொண்டு விண்ணில் சீறிப்பாய்ந்தது.

பின்னர் அந்த செயற்கைக் கோள் வெற்றிகரமாக புவி வட்டப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டது. (2)

# மியன்மாரில் நிலச்சரிவு

## 50 சுரங்கத்தொழிலாளர்கள் பலி



(நேபிடா)

மியன்மாரில் பச்சை மரகதக்கல் வெட்டி எடுக்கும் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 50 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

மியன்மார் நாட்டின் கச்சின் மாநிலம், ஹபாகந்த் பகுதியில் மரகதக்கல் சுரங்கம் உள்ளது. இங்கு நேற்றுக் காலையில் வழக்கம்போல் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது.

ஏற்கனவே கனமழை காரணமாக நிலப்பகுதி ஈரமாக இருந்ததால், நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. இதில் ஏராள மான தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர். தீயணைப்பு மற்றும் மீட்புக் குழுவினர் சம்பவ இடத்திற்கு வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சுமார் 50 தொழிலாளர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், மேலும் பலர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. எனவே, உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என நம்பப்படுகிறது. (2)

## நித்திரைக்குச்...

இரவு நித்திரைக்குச் சென்ற ராஜேந்திரன் விமலராஜ் (வயது-27) என்ற இளைஞனை காலை தாயார் எழுப்பிய சமயத்தில் இளைஞன் உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

இதனையடுத்து தாயார் அயலவர்களுக்கு தகவலை வழங்கியதனையடுத்து அய்லவர்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா பொலிஸார் இளைஞனின் சடலத்தை மீட்டு, மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா-299)

## சுகாதார விதி...

தாரப் பகுதியினரால் மூடப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸின் தாக்கம் ஏற்பட்ட நிலையில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு பின்னர் தளர்த்தப்பட்ட நிலையில் திருமண மண்டபங்கள் உரிய சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக நடைபெற வேண்டும் என்று மிக இறுக்கமான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் திறக்கப்பட்டன.

இந்நிலையில் கரவெட்டிப் பகுதியில் உள்ள திருமண மண்டபம் ஒன்று சுகாதாரப் பகுதியினரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தப்பட்ட விதிமுறைகளுக்கு மாறாகச் செயற்பட்டுள்ளது .

இச் செயற்பாட்டின் காரணமாக திருமண நிகழ்வு நிறைவடைந்ததன் பிற்பாடு நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை தொடக்கம் 14 நாட்களுக்கு தற்காலிகமாக சுகாதாரப் பகுதியினரால் மூடப்பட்டுள்ளது. (ஞா-18,60)

## புலிகளின் ஆவண...

இதன்போது நிலத்தில் புதைக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் ஆவணங்கள் சில மீட்கப்பட்டுள்ளன.

மாத்தளன் பகுதியில் தனியார் காணி ஒன்றில் வீடு ஒன்றிற்குள் ஆயுதங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக கிடைக்கப் பெற்ற தகவலையடுத்து நீதிமன்ற உத்தரவிற்கு அமைய குறித்த பகுதியில் தோண்டும் நடவடிக்கை ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது விடுதலைப் புலிகளின் இலச்சினைகள் பதிக்கப்பட்ட துண்டுகள் மற்றும் நிலத்தில் புதைக்கப்பட்ட துண்ிகள், தமிழீழ வரைபடப் புத்தகம் விடுதலைப் புலிகளின் வங்கியான வைப்பகத்தின் சிறுவர்களுக்கான தளிர் சேமிப்பு கணக்குப் புத்தகம், ஒளிப்படங்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன. (ஞா-281)

## ஜனாதிபதியைத்...

ஆட்சியிலேயே வடக்கு மற்றும் கிழக்கில் அபிவிருத்திப் பணிகள் துரிதமாக முன்னெடுக்கப்பட்டது என்பதை தமிழ் ஊடகவியலாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

அனைத்து அடிப்படைப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டுமாயின் பொதுஜன பெரமுன மூன்றில் இரண்டு பெரும்பான்மையினைப் பெற வேண்டும் என்பது கட்டாயமாகும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தேகம பிரதேசத்தில் நேற்று இடம் பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதியின் சுபீட்சமான எதிர்கால கொள்கைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டுமாயின்' அவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினர் அரசாங்கத்தை அமைக்க வேண்டும். கடந்த அரசாங்கத்தினைப் போன்று முரண்பாடான அரசாங்கம் தோற்றம் பெற்றால் அனைத்து இலக்குகளும் பலவீனப்படுத்தப்படும். இவ்வாறான நிலை இனியும் தோற்றம் பெறக்கூடாது.

நாட்டுக்கும், ஊருக்கும் சேவையாற்றுபவர்களை மக்கள் இம்முறை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்ய வேண்டும். கல்விமான்கள், துறைசார் நிபுணர்கள் ஆகியோர் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி இம்முறை தேர்தலில் போட்டியிடுகிறார்கள். தமக்கானவரை தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கு உண்டு. அந்த உரிமையை முறையாக பயன்படுத்துவது அவசியமானதாகும்.

வடக்கு மக்களின் ஆதரவு இல்லாமல் ஜனாதிபதியை தெரிவு செய்ய முடியும் என்பதை உங்களின் வாக்குகளினால் நிரூபிக்க முடிந்தது. எனது ஆட்சியில் வடக்கில் துரிதமான அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப்பட்டன என்பதை தமிழ் ஊடகவியலாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். எமது ஆட்சியில் மாகாண அடிப்படையில் அபிவிருத்தி பணிகள் வேறுபடுத்தப்படாது. மந்தகதி யில் உள்ள அபிவிருத்தி நிர்மாணப் பணிகள் புதிய அரசாங்கத்தில் துரிதமான நிறைவு செய்யப்படும் என்றார். (ஞா)

## நயினைத் தாய்...

கோவிட் – 19 வைரஸ் தாக்கம் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் தேர்த் திருவிழா இடம்பெறுவதுடன் நயினாதீவிலுள்ள பக்தர்கள் மட்டுமே இம்முறை திருவிழாக்களில் பங்குகொள்ள அனுமதி வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## மாகாண சபை...

னால் பாதிக்கப்பட்டுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு சிறப்புத் திட்டமொன்றை அறிமுகம் செய்து அதனூடாக நிவாரணங்கள் வழங்கத் தீர்மானித்துள்ளேன்.

அதேபோன்று வடக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்தும் கவனம் செலுத்தியுள்ளேன்.

கிராமிய மற்றும் நகர நிர்வாக கட்டமைப்பை உருவாக்கி தமது பிரதேச அபிவிருத்திகளை அந்த மக்களே தீர்மானிகக கூடிய வகையில் திட்டத்தை உருவாக்குவேன்.

அனைத்து சந்தர்ப்பங்களிலும் 13 அரசியலமைப்பை பாதுகாத்து செயற்படுவேன். ஒருமித்த நாட்டிற்குள் அதிகாரப் பகிர்வை மையப்படுத்திய மாகாண சபையும் என்னால் பாதுகாக்கப்படும்' எனக் குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## நெடுந்தீவுப்...

தீவு தெற்கு கடற்கரை வழியாக தீவுக்குள் நுழைந்த நிலையில், உடனடியாக செயற்பட்ட பாதுகாப்புத் துறையினர் அவரைக் கைது செய்து தனிமைப்படுத்தியுள்ளனர்.

சிறிய தெப்பம் ஒன்றில் தமிழகத்திலிருந்து நெடுந்தீவுக்குள் நுழைந்த குறித்த நபர் வேலணை 2ம் வட்டாரத்தைச் சேர்ந்த சுரேஸ் (வயது-29) என அடையாளம் காணப்பட்டிருக்கின்றார்.

2004ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் இருந்து இந்தியா சென்று தங்கச்சிமடம் பகுதியில் தங்கியிருந்த குறித்த நபர் நேற்று 12 மணியளவில் நெடுந்தீவின் தெற்கு கடற்பகுதி வழியாக தீவுக்குள் நுழைந்துள்ளார்.

குறித்த நபர் நுழைவதை அவதானித்த மீனவர்கள் கடற்றொழிலாளர் சமாசத்திற்கு தெரிவித்ததைத் தொடர்ந்து அவர்கள் ஊடாக நெடுந்தீவு பொலிஸாருக்கும் கடற்படையினருக்கும் தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து குறித்த நபர் கைது செய்யப்பட்டு சுகாதார பிரிவினர் ஊடாக தனிமைப்படுத்தப்பட்டிருக்கின்றார். தமிழகம் ஊடாக யாழ்.மாவட்டத்தில் மீண்டும் கொரோனா பரவும் அபாயம் உள்ளதை சுகாதார அமைச்சு எச்சரித்துள்ள நிலையில்,

தமிழகத்திலிருந்து இலங்கைக்குள் சட்டவிரோதமாக நுழையும் இவ்வாறானவர்களால் அந்த எச்சரிக்கை உறுதிப்படுத்தப்படுவதாக உள்ளது. (ஞா)

## பெற்றோல்...

குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்த சம்பவம் நேற்றிரவு 8.30 மணி அளவில் இடம்பெற்றுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த மர்ம நபர்களே இந்தத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பெற்றோல் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஞா)

## ஒருவர் மீது...

தாக்குதலுக்கு இலக்கான நிலையில் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.தென்மராட்சி மிருசுவில் ரயில் நிலையத்திற்கு முன்பாக ஒருவர் மீது நேற்று முன்தினமிரவு 9.30 மணியளவில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலில் காயமடைந்தவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மிருசுவில் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். (ஞா)

## 2066...

அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 2,066 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 1,827 ஆக அதிகரித் துள்ளது. கொரோனா தொற்று நோயாளிகளில் 228 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஞா)

## கட்சி...

நேற்று வியாழக்கிழமை பொலிஸ ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளையடுத்தே இத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட் டுள்ளது. (ஞா)

## 99 சதவீதம்...

கூறுகின்றேன்.

அதேபோன்று அங்கு காணப்படும் 99 சதவீதமான தொல்பொருள்கள் விகாரைகளுக்குரியது என்று தொல்பொருள் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எல்லாவல மேதானந்த தேரர் மீண்டும் தெரிவித்துள்ளார். (ஞா)


கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 02-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2466
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 03 26 32 39

நீரோகா
திகதி 02/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0683
லக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 14 20 43 53

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1592
திகதி 2020/07/02
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 03 06 28 36

மஹஜன சம்பத
திகதி 2020/07/02
சீட்டிழுப்பு இலக்கம் 4171
ஆங்கில எழுத்து H
வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 8 3 3 4 5

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1669
சீட்டிழுப்பு திகதி 02/07/2020
வெற்றி இலக்கங்கள் 33 38 47 56
ஆங்கில எழுத்து U
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 50,099,360
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2849
வர்ணம் கபிலம்
திகதி 02.07.2020
வெற்றி இலக்கங்கள் 19 54 60 62
மகரம்
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 2,165,408
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 968
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.07.02
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 67,042,505/-
வெற்றி இலக்கங்கள் 06 56 57 77
ஆங்கில எழுத்து O

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1168
சீட்டிழுப்பு திகதி 02.07.2020 வியாழக்கிழமை
D 24 34 36 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,903,248

## வேலை வாய்ப்பு

தேசிய அபிவிருத்தி லொத்தர் ரிக்கட் விற்பனைக்கு சுன்னாகம், மல்லாகம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களிற்கு விற்பனையாளர்கள் தேவை.

தொடர்புகளுக்கு (3176)

077 122 8841 , 021 221 5777

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப் பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு (3172)

Tel : 077 340 5951

Email : engchelvam@gmail.com

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
- நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
- மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

(C-9624)

0768226240

## தவறிவிட்டது

செல்வச்சந்நிதி ஆலய திருமண நிகழ்வின்போது ( 02.07.2020 ) இரண்டு பவுண் பூட்டுக்காப்பு தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

( தகுந்த சன்மானம் வழங்கப்படும் )

தொ. இல : 077 271 9829

ப. ஸ்ரீதரன்

மூளாய் வீதி, வட்டுக்கோட்டை. (C-9821)

## AMC ACADEMY

BMC Lane, Clock Tower Road, Jaffna

A/L மற்றும் O/L ICT ( ஆங்கில மற்றும் தமிழ் மொழி மூலம் ) வகுப்புக்கள்

ஆரம்பம் : 04.07.2020 பி. ப : 3.00 மணி

ஆசிரியர் : Mr. M.I.PALAH (3178)

| | | |
|---|---|---|
| A/L 2020 | 3.00 p.m - 4.00 p.m | சனி / ஞாயிறு |
| A/L 2021 | 4.00 p.m - 5.00 p.m | சனி / ஞாயிறு |
| A/L 2022 | 5.00 p.m - 6.00 p.m | சனி / ஞாயிறு |

தரம் 06 - O/L வரையான ICT வகுப்புக்களும் நடைபெறுகின்றது.

T.P : 077 694 4543 | 070 171 0061

## D.C.Mn யாழ். நகர்

(யாழ்/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அருகாமை)

கலை, வர்த்தகம்

A/L - 2020, 2021

2022 புதிய பிரிவு 8.00 மணி

நாளை- 04.07.2020

வழமையான நேர அட்டவணை

புதிய அனுமதிகள் வழங்கப்படும்

077 011 9434 (3173) நிர்வாகி

## பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம். / கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

இரு இடங்களிலும் நாளை முதல்

A/L 2022, 2021, 2020

கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்

அனைத்துப் பிரிவுகளும் வழமையான நேர அட்டவணைப்படி ஆரம்பமாகின்றன.

Note - A/L 2022 மாணவர்கள் நாளையிலிருந்து உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு (C-9820)

யாழ். நகர் - 077 220 9651

சுன்னாகம் - 076 638 5294

## NEW SCIENCE HALL

Kannathiddy Road Jaffna

**Chemistry**

**G.BENO B.Sc & PGDE** (3166)

**2021 - Organic**

T/M → Sat , Sun - 12 - 2 pm

E/M → Sat , Sun - 5.00 - 6.30 pm

**2022 - Bonding**

T/M → Sat , Sun - 9.45 - 11.45 am

E/M → Sat , Sun - 3.30 - 5.00 pm

Starts on... 05.07.2020

## மீண்டும்



வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த எமது சேவை மீண்டும் வழமைபோல் அனைத்து நாடுகளுக்கும் 100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது. (C-9775)

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 6113

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்**



இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

தொ.பே:- 021 222 3536

## NEC

1. பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி.
2. மணிக்கூட்டு வீதி, யாழ். நகர்.

A/L - 2022

கலை, வர்த்தக, கணித உயிரியல் பிரிவுகளுக்கான மீண்டும் ஓர் புதிய பிரிவு


ஆரம்பம் : 04.07.2020 சனி, காலை 8 மணி

A/L 2020, 2021, Day Class

மாணவர்களுக்கான புதிய பாட அலகுகள் ஆரம்பமாகின்றன. (C-9819)

T.P : 077 469 6695 / 076 535 0999


# மரண அறிவித்தல்



## இராஜசிங்கம் நித்தியானந்தன்

(நடேஸ்வராக் கல்லூரியின் தூய பிரயோக கணித ஆசிரியர்)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 08-07-1935 | 02-07-2020 |

தெல்லிப்பளை - துர்க்காபுரம், கே.கே.எஸ் வீதி, இராமகிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராஜசிங்கம் நித்தியானந்தன் நேற்று (02.07.2020) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ராஜசிங்கம்-மனோன்மணி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற இராஜமனோகரன் (பதிவாளர்), Dr.தெய்வேந்திரன், அருள்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நகுலேஸ்வரதேவி, காலஞ்சென்ற Dr.செங்கமலம், கனகரட்ணம் (ஓய்வு பெற்ற உதவி பொதுமுகாமையாளர், இலங்கை வங்கி) மைத்துனரும், இராமகிருஷ்ணா, சாரதாமணி, மனோன்மணி, இராதாகிருஷ்ணா, கிருஷ்ணமணி; இரமணகிருஷ்ணா, இரஞ்சித்கிருஷ்ணா, துஸ்யந்தி, தமயந்தி,செந்தூரன் ஆகியோரின் ஆசை அப்பாவும் காலஞ்சென்ற பிரியதர்சினி, உதயதர்சினி, ஸ்ரீராகவன் ஆகியோரின் ஆசை மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.07.2020) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் 4.00 மணியளவில் கட்டுப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"இராமகிரி"
கே.கே.எஸ் வீதி, துர்க்காபுரம்,
தெல்லிப்பளை. (3179)

077 756 1341
021 205 9271

தகவல்:
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.